ஓம்

# ஞானசாகரம்

## (அறிவுக்கடல்)

## JNANASAGARAM

இது

முப்பத்தெட்டு ஆண்டுகளாக நடைபெறுந்

தனிச் செந்தமிழ் வெளியீடு

**A BI-MONTHLY**


திருவள்ளுவர் ஆண்டு ௧௯௭௧, தை, மாசி.

திருமலர், ௧௯.] [இதழ், ௧, ௨.


பொருளடக்கம்


**மனிதவசியம் அல்லது மனக்கவர்ச்சி**

(Personal Magnetism)

**சோமசுந்தர நாயகர் வரலாறு**

(Life-Sketch of Somasundara Nayagar)

**இளைஞர்க்கான இன்றமிழ்**

(Tamil Reader for the Young)

**நாகநாட்டரசி குமுதவல்லி**

(Kumudavalli, a high class Tamil Novel)



ஆசிரியர் :

**மறைமலையடிகள் என்னும்**

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,

**SWAMI VEDACHALAM,**

பொதுநிலைக்கழக குரு,

**பல்லாவரம்**

**PALLAVARAM**



பொதுநிலைக்கழக நிலையத்தின்கண் உள்ள

திருமுருகன் அச்சுக்கூடத்திற்

**T. M. PRESS**

பதிப்பிக்கப்பட்டது.

15th January, 1940.

ஒரு திருமலர்க் கையொப்பம்] [நான்கு ரூபா நாலணா



All Rights Reserved.

ஓம்

# பல்லாவரம், ஆசிரியர் மறைமலையடிகளின்
# பொதுநிலைக்கழக 26-ஆம் ஆண்டு
## நிறைவுவிழா நிகழ்ச்சி அறிக்கை

முன் தொடர்ச்சி

தமிழ்ப் பயிற்சியைக் குறைத்து ஆரியத்தை நிலைநாட்டவே ஆரியத்தின் சிதைவான இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்க அமைச்சர்கள் முனைந்திருக்கின்றனர். பலரை அடிமையாக்கிச் சிலராகிய தாம் அவரை ஆள முயல்வதே ஆரியரின் இயல்பு. ஆதலால், ஆரியரது தலைமையை அடியோடொழிக்க முற்படல் வேண்டும். நமது தமிழ்நாட்டிற் றமிழரைத் தவிர வேறெவர்க்கும் முதன்மை கொடுத்தல் கூடாது. பார்ப்பனர் வந்தாற் பூணூலை அறுத்து எறிந்துவிட்டு வருகிறவரையில் அவர்க்கு இடந்தரல் ஆகாது.

இனிச், சமயம் என்பது உண்மை யொழுக்கத்தில் நிலைபெற்ற அன்புடைமையாகும். மெய்யான சைவசமயந் தமிழ்நாடு முழுவதும் பரவல் வேண்டும். அன்பினால் மக்களைத் தன்வழிப்படுத்தலே சைவத்தின் மெய்ந்நெறியாகும். இந்த உலகத்திலே சைவத்தினுஞ் சிறந்த சமயம் வேறொன்றில்லை. பண்டைச் சைவந்தான் தமிழ்; தமிழ்தான் சைவம். ஆனால், இக் காலத்திலோ ஊன் உணவை வெறுத்தவர்கள்தாஞ் சைவர்கள் எனக் கருதப்படுகின்றனர். இவர் புறச் சைவரே யல்லால் அகச்சைவர் ஆகார்.

சைவர்களுக் குரிய சிவபிரான் திருக்கோயில்களிற் பார்ப்பனர்களுக்கு என்னவேலை? சிவவணக்கத்திற்குப் பார்ப்பனர்கள் முற்றும் மாறானவர்களாயிருந்தும், அவர்கள் அங்கே கருவறையின் அண்மையிற் போய்த் தமக்கே முதன்மை தேடிக் கொள்கின்றார்கள். சிவவணக்கத்திற்கு முற்றும் உரியவர்களான சைவர்களோ அப்பார்ப்பனர்கள் நிற்குமிடத்திற்குச் செல்ல இடம் பெறாமற், புறத்தே நிறுத்தப்படுகின்றார்கள்!

ஆனால், திருமால் கோயில்களிலுள்ள வைணவப் பார்ப்பனரோ, பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என வேறுபிரித்துப் பாராமல், எல்லாரையும் ஏதொரு வேறுபாடு மின்றித் திருமால் திருவருவத்தின் அருகே வந்து நின்று வணங்கும்படி அழைக்கின்றார்கள். இங்ஙனமாக வைணவர் கோயில்களில் தமிழர்க்கு முதன்மைதரப்பட்டிருக்கச், சைவர் கோயில்களிலோ தமிழர்க்கு முதன்மையே இல்லாதிருக்கின்றது. இதனால், சத்தியத்திற்கு (உண்மைக்கு) உரிய சைவமானது இப்போது சத்தியம் (உண்மை) இழந்ததாயிருத்தல் நன்கு புலனாகின்றதன்றோ?

இன்னும், பண்டைநாளி லிருந்து தமிழர்கள் உண்மை நிலையில் உறுதியாயிருந்தவர்கள் என்பதற்கு, அவர்கள் சத்தியம் என்பதற்கு வழங்கிவரும் மூன்று தனித்தமிழ்ச் சொற்களே சான்றாயிருக்கின்றன. அச்சொற்கள்: உண்மை, வாய்மை, மெய்ம்மை என்பனவாகும். அவற்றுள், உண்மை என்பது உள்ளத்தின் றன்மை, வாய்மை என்பது வாயின்றன்மை, மெய்ம்மை என்பது மெய்யின்றன்மை எனப் பொருள்தரும்; எனவே, உள்ளத்தில் நிகழும் நிகழ்ச்சியும், உள்ளத்தில் நிகழ்ந்ததைத் தெரிவிக்கும் வாயின் நிகழ்ச்சியும், வாயிற்சொன்னபடியே செய்யும் மெய் அல்லது உடம்பின் நிகழ்ச்சியும் ஒன்றோடொன்று முரணாமல் ஒத்து ஒருமுகப்பட்டு நிற்பதே சத்தியம் எனத் தமிழ்ச்சான்றோர்கள் கருதினமை தானே பெறப்படும். எனவே, மனம் மொழி மெய் என்னும் முக்கருவிகளாலும் மக்கள் உண்மை வழுவாமல் வாழும் வாழ்க்கையே சத்தியவாழ்க்கையா மென்பது தமிழ்ச்சொல் லாராய்ச்சியினாலேயே தெற்றென விளங்கா நிற்கின்றது. இவ்வாறு முக்கருவியும் உண்மை நெறியில் ஒத்து நிற்றலே சத்தியம் எனத் தமிழ்ச் சொற்கள் உணர்த்துமாப்போல், வேறு மொழிச்சொற்கள் உணர்த்துதலைக் கண்டிலம், என மேலுஞ் சில கூறியமர்ந்தார்கள்.

அதன்பிற் பொதுத்தலைவராகிய ஆசிரியர் மறைமலையடிகள் எழுந்து, விரிவுரையாளர்க்கும் பாரதியார்க்கும் நன்றிமொழி கூறியபின், மேற்போந்த விரிவுரைகளின்மேற் சில முதன்மையான குறிப்புகளை எடுத்துரைத்தார்கள்; அவை:

ஓம்

# மனித வசியம்

அல்லது

# மனக்கவர்ச்சி

## முதல் இயல்

### வசியத்தின் உண்மை நிலை

'மனிதவசியம்' என்பது மக்களின் உள்ளத்தைக் கவர்வதாகிய ஓர் ஆற்றலை உணர்த்தும். இந்த ஆற்றலானது இயற்கையாக எல்லாரிடத்துங் காணப்படவில்லை; சிலரிடத்து மட்டுமே காணப்படுகின்றது. நல்லது, சிலரிடத்து மட்டும் உள்ள இந்த ஆற்றல் எதனால் உண்டாகின்றதென்றால், அவரிடத் தமைந்த அழகினால் என்று பெரும்பாலும் எல்லாரும் நினைக்கின்றார்கள். ஆனாலும், இஃது உண்மையாகத் தோன்றவில்லை. அழகுடைய சிலர் பிறரைத் தம்வழிப்படுத்த மாட்டாமல், தம்மைக்கண்டு அவர்கள் வெறுப்படைந்து போகும்படி செய்தலையும், அழகில்லாத பிறர்சிலர் பிறர் தம்மை விரும்பும்படி செய்து அவரைத் தம்மாட்டு ஈர்த்தலையும் நாம் வழக்கத்திற் காண்கின்றோமாகையால், அழகுதான் மனிதவசியத்திற்குக் காரணமென்று சொல்வது பொருத்தமாகக் காணப்படவில்லை. அப்படியானால், உலகத்தாருங் கற்றறிவுடையாரும் அழகைபற்றிச் சிறப்பித்துப் பேசுவது ஏன் என்றால்; இங்கே அழகு என்றது உள்ளத்தின் அழகேயல்லாமல், உடம்பின் அழகுமட்டும் அன்று. ஒருவருடைய உள்ளத்தின் அழகைத்தான் கற்றாரும் மற்றாரும் பாராட்டிப் பேசுவர். உடம்பின் அழகைக் கண்டும் எல்லாரும் வியந்து பேசுவதை நாம் பழக்கத்திற் பார்த்திருக்கின்றோமே எனின், உடம்பின் அழகானது பார்வைக்கு மட்டும் முதலிற் சிறிதுநேரங் கவர்ச்சியை உண்டுபண்ணுமேயல்லாமல், உள்ளத்தின் அழகைப்போல் எப்போதும் அஃது இன்பத்தைத் தராது. ஒருவன் உடம்பின் அழகால் மிகச்சிறந்தவனாயிருந்தாலும், அவன் நல்லகுணமில்லாதவனாய் எந்நேரமும் பொய்யே பேசிக்கொண்டும், பிறரை ஏமாற்றிக்கொண்டுங், கள்அருந்துதல் கொலைசெய்தல் திருடுதல் முத

லான தீய ஒழுக்கங்களிற் பழகிக் கொண்டும் வருவனாயின் அவனைக்கண்டு யாரேனும் உவப்பார்களா? ஒருபெண் பேரழகாற் சிறந்தவளாயிருப்பினும் மடமை நிரம்பினவளாய்ச், செவ்வையாகப் பேசவுந் தெரியாமல், அழுக்காடை யுடுத்து அருவருக்கத் தக்க செய்கையும் உடையவளாயிருந்தால் அவளைக்கண்டு யாரேனும் மனம் விரும்புவார்களா? ஆகலால், உடம்பின் அழகே எல்லார்க்கும் விருப்பத்தை யுண்டுபண்ணும் என்பது எங்ஙனம் பொருந்தும்? உடம்பின் அழகு இல்லாதவராயிருந்தும் நற்குணமுஞ் சொல்நயமுந் தூயநடையும் உள்ள ஒருவரை எல்லாரும் விரும்புதல் ஒவ்வொருநாளும் பழக்கத்திற் காணலாமன்றோ? அப்படியானால், உடம்பின் அழகிலே நம் எல்லார்க்கும் இயற்கையாகவே விருப்பமுண்டாவது ஏன் என்று வினவின்; முதலிற் சிறிது நேரமேனும் பார்ப்பவர்களுக்குக் கவர்ச்சியை உண்டுபண்ணுவதுபற்றி உடம்பழகிலே நமக்கு விருப்பமுண்டாகின்றது; என்றாலும், உடம்பழகு மட்டுமே எப்போதும் நிலையாக மக்களைக் கவரமாட்டாது. உள்ள அழகு மட்டுமே அவர்களை எப்போதுந் தன்மாட்டு இழுக்கும் ஆற்றலுடையதா யிருக்கின்றது. அவ்வாறாயின், உடம்பினழகு வேண்டுவதில்லையோ வென்றால்; உள்ளத்தின் அழகுடையார்க்கு உடம்பினழகும் அமைந்திருந்தால், அஃது அழகுள்ளமங்கைக்கு அணிந்த மணிக்கலங்கள் போற் சிறக்குமே யல்லாமல், மனநன்மை யில்லாதார்க்குள்ள உடலழகானது, அழகற்ற பெண்ணுக்கு மாட்டிய அணிகலங்கள் போற் பயனின்றி மங்குமென்பது எவரும் அறிந்ததேயாம்.

இனி, உள்ளஅழகு என்பது யாதோ வென்றாற் கூறுகின்றாம். உள்ளம் என்பது அறிவும் அறிவுடைய உயிருமாகும். அறிவுடையஉயிர் ஒன்றை அறிதலும், ஒன்றைவிரும்புதலும், ஒன்றைச்செய்தலும் வல்லது. ஒன்றைஅறியுமிடத்து அதன் அறிவு அழகுற்றும்விளங்கும், அழகின்றியுந் துளங்கும். ஒன்றைவிரும்புமிடத்தும் அதன் விருப்பம் அழகுடனுந் துலங்கும் அழகின்றியுங்கலங்கும், ஒன்றைச்செய்யுமிடத்தும் அதன் செய்கை அழகாயும் இருக்கும் அழகின்றியுங் கருக்கும். இப்படிப்பட்ட இயற்கை எல்லா உயிர்களிடத்துங் காணப்பட்டாலும், மக்களாய்ப் பிறந்த உயிர்களிடத்து மட்டுமே அது மிகவும் நன்றாய்ப் புலப்

பட்டுத் தோன்றுகின்றது. இன்னும், இந்த மக்கட்பிறவியிலே அறிவும், விருப்பமுஞ் செய்கையும் அழகுடன் தோன்றுவது மிகுதியோ அழகின்றித் தோன்றுவது மிகுதியோ என்று நாஞ் சிறிது ஆராய்ந்து பார்ப்போமாயின், அவை அழகின்றித்தோன்றுதலே மிகுதியாய்க் காணப்படுகின்றது. அழகான அறிவுடையாரையும், அழகான விருப்பமுடையாரையும், அழகான செய்கையுடையாரையுங் காண்பது அரிதினும் அரிதா யிருக்கின்றது. மக்களிற் பெரும்பாலார் அழகல்லா அறிவு விழைவு தொழில்களையே மிகுதியும் உடையராய் இருக்கின்றனர். இப்படி எல்லாரும் அழகல்லாதவற்றையே அறிந்தும், விரும்பியுஞ், செய்தும் வருகின்றாராயினும், அழகான அறிவு விழைவு செயல்களைப் பிறரிடங் காணும்போது அவர்கள் அவற்றிற்காக அவர்களிடம் மிகுந்த நன்குமதிப்பும் விருப்பமும் வைத்து அவர்களுக்கு அடங்கி நடக்கின்றார்கள்.

இஃதென்ன புதுமையென்றால், மாந்தர் தம்மைப் போலவே நடக்கும் பிறரைக் கண்டால் அவர்களிடத்துச் சிறந்தவொன்றும் இல்லாமை பற்றி அவர்களைக் கருதிப்பாராமற் போகின்றனர். ஒவ்வொருவரும் அழகல்லாதவற்றையே செய்து வருதலால், எல்லார்க்கும் பொதுவான அச் செய்கையின் காரணத்தாலே ஒருவர் மற்றொருவரை உன்னிப்பதற்கு இடமில்லாமற்போகின்றது. இதனை ஒருநிகழ்ச்சியில் வைத்து விளக்கிக்காட்டுகின்றாம். ஒரு நகரத்தின் கடைத்தெருவிலே அந்நகரத்திலுள்ள குடிமக்கள் போய்த் தத் தமக்கு வேண்டிய பொருள்களைப் பெற்றுக் கொண்டு போகும்போது ஒருவரையொருவர் கருதிப்பாராமற் செல்கின்றனர். ஏன் அங்ஙனம் அவர்கள் தம்மிலே ஒருவரை மற்றொருவர் உன்னியாமற் செல்கின்றனர்? எல்லாரும் ஒரே வகைப்பட்ட நடையுடை பழக்கம் உடையராக இருத்தலால், ஒருவரை யொருவர் உன்னிப்பதற்கு அங்கே இடமில்லாமற் போகின்றது. அவ்வாறு அவர்கள் போய்க்கொண்டிருக்கையில் அத்தெருவிற் சடுதியிலே சீனதேசத்துமகனார் ஒருவர் வரக்கண்டால், ஒருவரையொருவர் பாராமற்சென்ற அந்நகரத்துமக்களெல்லாம் அங்கங்கேநின்று அவரை உன்னித்துநின்று பார்ப்பதைக் கண்டிருக்கின்றோம் அன்றோ? ஏன்? அச்சீனக்காரரின் வடிவமும்

நடை உடை பழக்கங்களுந் தம்மின் வேறான பான்மையுடன் காணப்படுதலினாலேயே அவர்கள் அவரைக் கருதிப்பார்க்கின்றனர். இதுபோலவே, மக்களில் ஒவ்வொருவருந் தம்மைப் போல் இருப்பவர்களை உன்னியாமலும், நன்குமதியாமலும் ஒழுகுவர். தம்மைப்போலவன்றி அழகிய அறிவு செயல் விழைவுகள் உடையாரைக் காணும்வழி அவர்கள் தம்மினும் வேறான தன்மையுள்ளவராய் இருப்பது உணர்ந்து, அவர்களிடத்து அச்சமும் நன்குமதிப்பும் உடையராய் மக்கள் எல்லாரும் அவர்களுக்கு அடங்கி ஒடுங்கி நடக்கின்றனர். அழகிய உள்ளம் உடையாரிடத்து மக்கள் அச்சமும் நன்குமதிப்பு மட்டும் வைத்து நடப்பார்களென்று நினைக்கவேண்டாம். அவர்களொடு பழகப்பழக அவர்களின் அருமைக் குணங்களை நன்குணர்ந்து அவர்களிடத்து நெகிழாத பேரன்பும் உடையவர்களாக நடப்பார்கள். ஆகவே, பிறருள்ளத்தைக் கவரவேண்டுமென எண்ணுபவர்கள், பிறரைவிடத் தம்மிடத்து உயர்குணங்கள் சிறப்புற்று விளங்கும்படி செய்து கொள்வார்களானால், அதுகண்ட பிறர் அவரது அருமையுணர்ந்து அவர்க்கு அடங்கி யொடுங்கி நடப்பர். அப்படியானால், தம்மிடத்து உயர்குணங்களை விளக்குதல்தான் எவ்வாறு என்றால், பிறரைப்போல் அறிவு விழைவு தொழில்களை அழகல்லா வழிகளில் நுழையவிடாது அழகுமிக்கவற்றில் மட்டுமே புகுத்தல் வேண்டும்.

இனி ஒன்றை அறியுமிடத்து மக்கள் அறிவு தீயவழியிலுஞ் செல்கின்றது, நல்லவழியிலுஞ் செல்கின்றது. நல்லநூல்கள் பல இருப்பவும் அவற்றைக்கல்லாமற், பொய் கொலை களவு காமங் கட்குடி முதலியவற்றை மிகுத்துப்பேசுந் தீயநூல்களைக் கற்பதிலேயே பலர்க்கும் அறிவு செல்கின்றது. பிறர்க்குத் தீங்கின்றிப் பொருள் தேடும் நல்லவழிகள் பல இருப்பவும், அவற்றைவிடுத்து, எல்லார்க்குந் தீமைபயக்கும் பொல்லாத சூழ்ச்சிகளாற் பொருள் தொகுப்பதற்கே எத்தனைபேர் அறிவைச்செலுத்திப் பாடுபடுகின்றார்கள்! பொய்கள் பற்பலசொல்லியுங், கொலைகள் பல செய்துங், களவாடியும், பெண்களைக் கூட்டிவிட்டுங், கள்ளால் மயக்கம் ஏற்றியும் பிறர்பொருளைக் கவர்ந்துகொண்ட ஒருவர் எத்தனை நாள் அப்பொருளைவைத்துப் பயன் பெறுவர்! குற்றங்கள் பலவுஞ் செய்து பொருள் ஈட்டியவர் அப்பொருளைக்காணும்போ

தெல்லாந் தாஞ்செய்த குற்றங்களைநினைந்து வருந்துவாரல்லரோ? அல்லது, இறக்குங்காலத்தேனுந் தாந் தொகுத்த பொருளில் ஒரு தினையளவாவது அவர் எடுத்துக்கொண்டு போகவல்லரா வரா? "காதற்றஊசியும் வாராதுகாண் நின்கடைவழிக்கே" என்ற பட்டினத்து அடிகள் திருமொழியின் உண்மையைச் சிறிதாயினும் நினைத்துப்பாருங்கள். மலையளவாகக் குவித்த பொருளும் ஒருவனிடத்தே மட்டும் நிலையாக இராது. அஃது இன்றைக்கு ஒருவன் கையிலும் நாளைக்குப் பிறனொருவன் கையிலுமாக இங்ஙனம் மாறிமாறிக்கொண்டேபோகும். மக்களுக்குப் பொருள் ஈட்டும் முயற்சியில் அறிவு செல்வதுபோல, மற்றவற்றில் அறிவு செல்வதில்லை. உயிரோடிருக்குங்காலும் பொருளினாற் பெறும் பயன்கள் பலவாயிருத்தலால், அவ்வளவு பயன் றருவதான பொருளை ஈட்டுவது குற்றமென்று யாஞ் சொல்கின்றிலேம். பிறர்க்குத் தீங்கல்லாவழிகளில் அதனைத் திரட்டுவதுதான் இப்பிறவிக்கும் மறுபிறவிக்கும் நன்மையைத் தருமாதலால், அவ்வாறு செய்யவேண்டுமென்பதே எமது கருத்தாகும். மேலும், இந்த மக்கட்பிறவி எடுத்தது எதற்காக என்று சிறிதாயினும் எண்ணிப்பார்த்து, இப்பிறவியைப் பயன்படுத்துதற்கான முயற்சிகளைத் தேடாமற், பொழுதுவிடிந்து அந்திபடும்வரையிலும் பணமோ பணம் என்று அலைவதைக்காட்டினும் வேறு இழிந்தது யாது இருக்கின்றது? மேலும், ஒருவன் தனக்கு இன்றியமையாத குறைகளை நீக்கும்பொருட்டு வேண்டிய அளவுக்குப் பொருள் தேடவேண்டுமேயல்லாமற், பொருளையே பெரிதா எண்ணி அலைவுது சிறிதுந் தக்கதன்று. உண்ணச்சோறும் உடுக்கக்கூறையும், இருக்க வீடும், மனைவி மக்களைப் போற்றத்தக்க வருவாயும் இருந்தாற் போதுமன்றோ? இவ்வளவு வசதிகளையும் பெறுதற்குப் போதுமான பொருள் ஒருவன் ஒருபகலிற் பாதி நாள் நல்வழியே முயன்றால் இனிது பெற்று இன்புறலாம். போதுமான அளவுக்குமேற் பொருளைத் தேடி வைத்து, அதனைக்காப்பாற்றுதற்குப் படும் வருத்தஞ் சிறிதன்று. மேலும், இப்பொருளின்தேட்டத்தைக்கண்டு மனைவிமக்கள் மிகச் செருக்குற்று, "எமக்கு இத்தனை பொருள் இருத்தலின் எமக்கு யாது குறை? எமக்குயார் நிகராவர்?" என்று நினைந்து, நற்குணங்களின்றிப், பலரும் வருந்த

ஒழுகிக் கடைசியில் அப்பொருளையும் அழித்துச் சோப்பேறிகளாய் அலைந்து துன்புற்றிறப்பார்கள். ஆகையால், அளவுக்கு மேற் பொருள் தேடித் தொகுப்பது, தொகுப்பானுக்குப் பல வகைத்துன்பங்களைத் தருவதே யன்றியும். அவன் மனைவிமக்கள் முதலாயினாரையும் நற்குணநற்செய்கைகளில் மேம்பட ஒட்டாமற்றடைசெய்து அழித்தவிடும்.

இவ்வியல்புகளைப் பொதுமக்கள் சிறிதும் நினைந்து பாராராயினும், மனிதவசியத்தினை விரும்பும் மேலோர் இவற்றை நன்கு அறிந்து, தமது அறிவைப் பெரும்பாலும் பேரின்பப் பொருள் தேடும் அழகிய முயற்சியிலே புகுத்தல்வேண்டும். பேரின்பப்பொருளிலே கருத்தைவைத்து அதனையே பெறுதற்கு நாட்டங்கொண் டிருப்பவனுக்குச் சிற்றின்பப்பொருள் அவன் வேண்டுங்காலத்திலெல்லாந் தானாகவே வரும். பொருளை ஒரு பொருட்டாகக் கருதாதவனுக்குப் பொருள் தானேவந்து சேர்தலும், பொருளையே நினைவில் வைத்திருப்பவனுக்கு அஃது அவனிடம் வாராமற்போதலும் யாம் பழக்கத்தில் அறிந்திருக்கின்றேம். அஃதெப்படியென்றாற்; பொருளிலே நோக்கம் வைத்திருப்பவனோடு பழகுகின்றவர்கள், அவனுடைய மனப்போக்கைத் தெரிந்து கொண்டவுடனே, 'இவன் பணந்தொகுப்பதிலேயே நாட்டமாயிருக்கின்றானாகலால், இவன் நமதுபணத்தை எங்கே ஏமாற்றிக் கைப்பற்றுவனோ' என்று அஞ்சி அவனை விட்டு அகலுவர்; இப்படியே பலரும் அவனைவிட்டு அகன்றால், அவன் பிறருடைய உதவியுந் துணையும் இன்றித் தானாகவே தான் நினைந்தபடி பொருள் ஈட்டக்கூடாமல் வறியனாய்ப் போவன். இனிப், பொருளைப் பொருட்படுத்தாதவன் இவன் என்று பழக்கத்தினால் மற்றொருவனை அவர்கள் தெரிந்தபிறகு, 'இவன் பொருளை ஒரு பொருட்டாக எண்ணாதவனாகலால், நாம் எத்தனை கோடி பொன்னை இவனிடம் வைப்பினும் இவன் நம்மை ஏமாற்றி அவற்றைக் கைப்பற்றமாட்டான்.' என்று பலரும் உறுதி கொண்டு அவனைத் துணையாக்கித் தம்வருவாயை மிகுதிப்படுத்திக்கொள்வதுடன், துணைநின்ற அவனுக்கும் வேண்டியபொருள் தந்து அவனை வளம்படுத்துவர். ஆகவே, பொருளைப் பொருள் பண்ணாதவனுக்குப் பொருள் தானேவருதல் திண்ணமாகும்

என்றறிக. மனிதவசியத்தினை விரும்புகின்றவர் பொருள் திரட்டும் அழகல்லாவழியில் அறிவைப் போகவிடாமற், பேரின்பப் பொருள் தேடும் அழகிய நெறியின்கண் அதனைப்புகுவித்தலே மிகவும் வேண்டற்பாலதாம். நிலையில்லாத பொருள்களைப்பற்றி விரித்துக் கூறும் பொய்ந்நூல்களை அறிவதனால் அழகிய உள்ளமுடையவர்களுக்கும் அறிவு மலினம் அடையும் ஆதலால், நிலையான பேரின்பப் பொருளைச் சொல்லும் உண்மைநூல்களை இடைவிடாது கற்றுவருதலே அறிவு விளக்கம் அடைதற்கு எளிதான வழியாகுமென்க.

இனி, ஒன்றை விரும்புமிடத்தும் மக்களது உணர்வு தீய வழியிலுஞ் செல்கின்றது நல்ல வழியிலுஞ் செல்கின்றது. தீய வழியிற் செல்கின்ற விருப்பமானது பற்றுதலுடனே கூடி நிகழும், நல்லவழியிற் செல்கின்ற விருப்பமோ பற்றுதலின்றியே நிகழும். முழுநீலமணிகளுஞ் சிவப்பும் வைரமும் பதித்துச் செய்த அழகிய பொற்கிண்ணம் ஒன்றைச் செல்வன் ஒருவன் வைத்திருக்கக் கண்ட அவன் நேசன் அதன் அழகை மிகவும் பாராட்டி வியப்பதுடன் போகாமல், அதனைத் தான் கைப்பற்றிக் கொள்ளவேண்டுமென்று நினைத்தால், அப்படி அவன் நினைப்பது பற்றுதலுடன்கூடிய விருப்பமாகையால் அது தீயவிருப்பமாய் முடியும். அழகிய அப்பொருளைக்கண்டு வியந்துபாராட்டுவது குற்றமன்று; அதனைத் தான் எப்படியாவது கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென எண்ணுவதுதான் குற்றமாகும். மற்றொரு நண்பன் அக்கிண்ணத்தைக்கண்டு மிக மகிழ்ந்து வியந்தானாயினும் அதன்மேற் சிறிதும் அவா வைத்திலன்; ஆகவே, இவனது விருப்பஞ் சிறிதும் பற்றின்றி நிகழ்ந்தமையால் அது மிகவும் நல்லதென்று சொல்லப்படுவதாகும். இவ்வாறே உலகத்திலுள்ள அழகிய பொருள் எதனையுந் தான் கண்டு விரும்பி மகிழலாமேயல்லது, அதன்மேற் பற்றுவைத்து ஒழுகுதல் சிறிதும் நன்மை தராது. பொருள்கள்மேற் பற்று வைக்கவைக்கக் கவலையும் மனத்துயரமும் வந்து வந்து வருத்தும். பொற்கிண்ணத்தின்மேற் பற்று வைத்தவனுக்கு அஃது அவன்கைக்கு எட்டாமையால் அளவிறந்த துயரமும் மனக்கவலையும் தருகின்றன; அதன்மேற் பற்று

வையாதவனுக்கோ அது மகிழ்ச்சியைத் தருமேயல்லாமற் சிறிதுந் துயரத்தைத் தராது.

இங்ஙனமே மனைவி, மக்கள், பெற்றோர், உற்றோர் முதலிய எல்லாரிடத்தும் விருப்பமும் அன்பும் மேற்கொண்டு அவர்கட்கு வேண்டுவன செய்து ஒழுகுதல் ஒருவனுக்குக் கடமையேயல்லாமல், அவர்களைத் தனக்கே உரியவர்களாகக்கொண்டு பற்று வைத்து நடத்தல் சிறிதும் பொருந்தாது. உலகத்தில் உள்ள எல்லாஉயிர்களுந் தத்தங் கடமைகளை வழுவாமற்செய்து, அறியாமையினையுந் துன்பத்தினையும் ஒழித்துப் பேரின்பத்தைப் பெறுதற்கு வந்திருக்கின்றன. இவ்வெல்லா உயிர்களையும் உலகத்தையும் உலகத்துப் பொருள்களையும் முற்றும் உடையவர் கடவுள் ஒருவரே. அவருக்கு உரிமையான இவ்வுயிர்களிடத்தும் பொருள்களிடத்தும் அன்புவைத்து ஒழுகுதல் இனிது, பற்று வைத்து ஒழுகுதல் தீது. தம்முடைய அல்லாதவற்றைத் தம்முடையன என்று நினைத்துப் பற்றுவைத்தலினாலன்றோ மக்கள் சொல்லற்கரிய துன்பக்கடலிலேகிடந்து உழல்கின்றனர்! உள்ள மட்டும் உரிய கடமைகளைச் செய்து அவரவர் தாந்தாம் வேறு வேறு செல்லுதற்குரிய வழிகளிற் பிரிந்துபோகும்போது, பற்றில்லாதவர்களுக்கு எவ்வகைத் துன்பமும் வருவதில்லை. வழிப்போக்கர்கள் ஒரு பெரும்பாட்டையில் ஒன்றுகூடிச் செல்லும்போது ஒருவரோடொருவர் அளவளாவி மிக மகிழ்வாராயினும், அவர்கள் தனித்தனியே பிரிந்து வெவ்வேறு வழிகளிற் செல்லுங்காற் சிறிதும் பற்றின்றிப் போவதுபோல, இவ்வுலகமென்னும் பெரும்பாட்டையில்வந்த வழிப்போக்கர்களான நாம் நமக்குரிய கடமைகளை மகிழ்ந்து நிறைவேற்றிப் பற்றின்றி இருக்கவேண்டுமேயன்றோ? ஆனால், உலகத்திலிருக்கின்ற மக்கள் அப்படி நடக்கின்றார்களாவென்றால், ஆ! சிறிதும் அவர்கள் இவ்வுயர்வழியிற் செல்கின்றாரில்லையே! இஃது என்வீடு என்கிறார்கள், என் நிலம் என்கிறார்கள், பிறன் என்வீட்டுத்திண்ணையிலும் இருக்க இசையேன் என்கின்றனர்! என்நிலத்திற் பிறன் நடக்கவும் உடன்படேன் என்கின்றனர்! ஆ! இவர்கள் வீடாயின், இவர்கள் நிலமாயின் இவர்களே என்றும் அவற்றிற்கு உரியவர்களாக இருக்க வேண்டுமென்றோ? இவர்கள் அவற்றிற்கு உரியவர்களாயது எத்

வைணவர் தமக்குத் துணையாய்க்கொண்ட சங்கராசாரியாரே "சிவா னந்தலகரி"யில் திருமால் பன்றியுருவெடுத்துச் சிவபிரான் திருவடியைத் தேடியலுத்த கதையைக் கூறியிருக்கின்றார். அதுவேயுமன்றித், திருமால் சிவபிரான் கையில் அம்பாகவும், அவர் ஏறும் எருதாகவும் , அவர்க்கு வழிபாடு செய்யும் அர்ச்சகராகவும், அவர்க்கு மனைவியாகவும், அவர் அம்பலத்தில் திருக்கூத்தாடியபோது மத்தளம் அடிப்பவராகவும் பலவகையாற் றொண்டுசெய்து பாராட்டிய பேரன்பின் றிறத்தை வியந்து பேசியிருக்கின்றார்.

இன்னும், அவர் தமது "சௌந்தர்யலகரி"யில், "நான்முகன் , திருமால், இந்திரன், இயமன், குபேரன் முதலான எண்டிசைக் காவலர் எல்லாம் அழிந்தொழிந்த காலத்தும், அம்மே, நின்காதலராகிய சிவபிரான் அழிவின்றி என்றும் உளரா யிருக்கின்றனரல்லரோ!" எனக்கிளந்ததும் என்னை?

மேலும், "பைபலாதம்" எல்லாப்பேறுகளும் பெறுதற்பொருட்டு உருத்திரப்பெருமானை வழிபடுதல்வேண்டுமென்பது நுவன்று, அங்ஙனம் அவரை வழிபட்டுத் தாம் விரும்பியபேற்றினை அடைந்தாரில் திருமாலை முதற்கண் எடுத்துக்காட்டலுற்று, அவர் சிவபிரான்கையில் அம்பாக அமர்ந்து தொண்டு செய்ததனையுந், தமது கண்ணைப்பிடுங்கிச் சிவபிரான் திருவடிகளில் அதனை மலராக இட்டு வணங்கி ஆழிப் படைபெற்றதனையும் பிறவற்றையும் நன்கெடுத்துக் கூறுதலாற், சைவசமயாசிரியருஞ் சங்கராசிரியரும் அவ்வுபநிடதப் பொருள்களையே தாமும் எடுத்துக் காட்டினாரன்றி, அவர் திருமாலை இகழ்ந்தனராதல் செல்லுமோ?

இன்னுஞ், சங்கராசிரியர் சிவாகமங்களை இகழ்ந்தனரென்றலும் பொருந்தாது; என்னை? அவர் திருஞானசம்பந்தப் பிள்ளையாரை வழுத்துகின்றுழி, " அம்மே, செந்தமிழ்க்குழவி யாகிய திருஞான சம்பந்தரென்னும் முகில் நின் திருமுலைப்பௌவத்திற்படிந்து அதன் கண் நிறைந்த ஞானவமிழ்தினைப்பருகித் தேவார ஆகமப்பொருள்களைப் பொழிந்ததன்றோ?" என்று பாடினாராகலின். திருஞான சம்பந்தர் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகப்பொருளுஞ் சிவாகம ஞானபாதப்பொருளும் ஒன்றேயாகையாற், சங்கராசிரியர் இவ்விரண்டையும் பெரிதுபாராட்டினவரென்பதிற் றட்டுண்டோ?

இனிக், "காஞ்சிமான்மியம்" உசு-ஆம் இயலிலுந் திருமால், திருஞான சம்பந்தர் அருளிய திருப்பதிகங்களை யோதிச் சிவவுரு

வினை எய்துமாறு சிவபிரானாற் கட்டளையிடப்பெற்ற வரலாறுங் கூறப்பட்டிருத்தல் காண்க.

இனிச், சைவசமயத்தின் உட்பகுப்பிற்சேர்ந்த 'பாசுபதம்' முதலிய மதங்களைச் சங்கராசிரியர் இழித்துப்பேசிய தென்னென்றால், அவர் நீலகண்ட சிவாசாரியாரைக்கண்டு அவராற் சைவசமய மெய்ப்பொருளைத் தெளிந்து உறுதிகூடுதற்குமுன், தாஞ்செய்த வேதாந்த சூத்திரவுரையில் அங்ஙனஞ்செய்தாராகலின், அது கொள்ளற் பாலதன்று.

மேலுஞ், சங்கராசிரியர் சைவசமயத்தையுஞ், சிவாகமங்களையும் இகழ்ந்ததற்கு ஒரு காரணம் "நீலகண்டவிஜயத்"திற் சொல்லப்பட்டிருக்கின்றது; அதுவருமாறு: ஒருகாற் சங்கரர் தம்மாணுக்கர் குழுவுடன் காஞ்சிமாநகர்க்குச்சென்று, சிவபிரான் றிருக்கோயிலிற் புகுந்ததும், அங்கே ஆயிரக்கால் மண்டபத்தில் ஆதிசைவக்குருக்கள் பலர் சிவாகமம் ஓதிக்கொண்டிருத்தல் கண்டு அவரை அணுகினர். இவரைக் கண்டதுங் குருக்கண்மார் சிவாகமம் ஓதுதலை நிறுத்திவிட்டனர். அதன்மேற் சங்கரர், அவற்றை அவர்கள் ஓதும்படிவேண்ட, "நீர் சிவதீக்கை பெறாதவராகலின் நீர் கேட்கச் சிவாகமங்களை ஓதுதல்ஆகாது" என ஆதிசைவர் அதற்கிணங்காது மறுத்துவிட்டனர். சங்கரர் அவர் கூறியதன் உண்மையுணராமல் அவர்களோடு மாறுகொண்டு, ஆதிசைவர்களையுஞ் சிவாகமங்களையுஞ் சைவசமயத்தையும் இழித்துப்பேசி வந்ததுடன், அக்காலத்திருந்த அரசர்களைத் தமக்குத் துணைகொண்டு, தமக்கு இயன்ற இடங்களிலிருந்த சிவபிரான் றிருக்கோயில்களில் வைதிகரை வழிபாடுசெய்யுமாறும் ஏற்படுத்தினர்; பின்னர்ச் சிறிதுகாலங்கழித்து நீலகண்ட சிவாசாரியாரைக் கண்டு வணங்கி, அவராற் சிவதீக்கை செய்யப்பெற்றுச், சைவசமய மெய்ப்பொருள் உணர்ச்சி கைவரப்பெற்றாராய்த் திகழ்ந்தனரென்பது.

இதற்குச் சான்றாகச், சங்கரர் தமது பிற்காலத்தில் இயற்றிய "பிரபஞ்சசாரம்" என்னும் மாந்திரிகநூலிற் சிவமந்திரங்களை உருவேற்றும் வகைகளுக்கெல்லாஞ் சிவாகமங்களிலிருந்தே மேற்கோள்கள் எடுத்துக்காட்டி நிறுவியிருப்பதும் நினைவிற் பதிக்கற்பாற்று.

ஆகவே, சைவமதங்களைச் சங்கரர் இகழ்ந்தது அவற்றின் உண்மையுணராத் தமது முற்பருவத்தேயாகலின், அதனை எடுத்துக்காட்டி வைணவர்கள் சைவசமயத்தை இகழ்ந்து தீவினைக்கு ஆளாகலாகாது. சிவபிரானிடத்துஞ், சிவாகமங்களிடத்துந், திருநீறு சிவமணிதாங்கும்

அடியார்களிடத்தும், இறைவற்குப்படைத்த பண்டங்களிடத்தும் எவர் தீயவெண்ணங் கொள்கின்றனரோ அவர் கீழ்மக்களாவர் என்று காந்தபுராணமுஞ், சிவபிரானையுஞ் சிவாகமங்களையும் எவன் இழித்துப் பேசுகின்றானோ அவனுக்கு எவ்வகையான கழுவாயும் (பிராயச்சித்தமும்) நூல்களிற் சொல்லப்படவில்லையென்று சிவதருமோத்தரமுங் கூறுதலை எல்லாரும் நினைவில் இருத்தக்கடவர். "அரனைப் பழித்துத் திரிபவரைப்பாரா தே" என்றார் சந்தான குரவராகிய உமாபதி சிவாசாரியாரும்.

வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த அப்பையதீக்கிதர் சைவசமய ஏற்றமுஞ் சிவபிரானே முழுமுதற் கடவுளாதலும் நன்குணர்ந்தன்றே சைவவொழுக்கம் மேற்கொண்டு ஒழுகலாயினர். சிவாகமச் சான்றோராகிய அகோரசிவாசாரியார், அப்பையரின் சைவநடையை வியந்தன்றே அவர்க்குச் சிவதீக்கைசெய்து அவரைச் சிவவழிபாடு செய்யப் பணித்துத் தம்மாணாக்கருள் ஒருவராக அவரைச் சேர்த்துக்கொண்டனர். நீலகண்டபாடியமே வேதாந்தசூத்திரக் கருத்தறிந்த உரையாதல் கண்டு, தம்மாசிரியர் இட்ட கட்டளைப்படி, அப்பையதீக்கிதர் அப்பாடியத்திற்குச் "சிவார்க்கமணிதீபிகை" என்னும் ஓர் உரை வகுக்கலாயினரென்பதனாலும், அங்ஙனமே 'பிரமவித்யாத்வரர்' முதலான முன்னாசிரியர்களும் அப்பாடியத்திற்குத் 'தார்ப்பணம்,' 'தாராவளி,' 'சீகண்டபாஷ்யசமர்த்தகம்' முதலான விளக்கவுரைகள் வரையலாயினரென்பதனாலும் நீலகண்டபாடியமே வேதாந்த சூத்திரத்திற்கு மெய்யுரையாதலும், சங்கரபாடியம் அங்ஙனம் அதற்கு மெய்யுரையாகாமையும் நன்கு விளங்காநிற்கும். ஆகவே, மெய்யுரையல்லாத சங்கரபாடியத்தை ஒரு துணையாக்கொண்டு வைணவர் சிலர் சைவசமயத்தை மறுக்கப்புக்கது, உமிக்குற்றிக் கைசலிப்பார் கதையாகவே முடிந்தமை காண்க.

## திருமங்கையாழ்வார் திருஞானசம்பந்தர் காலத்தவர் அல்லர்

இனி, வைணவரிற்சிலர் சிறிதும் ஆராய்ச்சியுணர்வின்றித், திருமங்கையாழ்வார் திருஞானசம்பந்தரை எதிர்ப்பட்டு அவர் கையிலிருந்த வேலைப்பிடுங்கிவிட்டார் எனுங் குருட்டுக்கதை யொன்றைச் சொல்லி, அவ்வாற்றாற் சைவத்திற்கு ஓர் இழிவுந் தமது வைணவத்திற்கோர் உயர்வுங் கற்பித்துவிடப்பார்க்கின்றார். இது சிறிதும் பொருந்தாது.

திருஞானசம்பந்தர் தாம் மூன்றாண்டுள்ள சிறுபிள்ளையாயிருந்த ஞான்றே உமை அம்மை பொன்வள்ளத்தேந்திய அருண்முலைப்பால் பருகி, எல்லா நூற்பொருள்களும் ஓதாது ஒருங்குணர்ந்த ஞானாசிரியராய், இறைவன் அளித்த பொற்றாளங் கையில் ஏந்தித், திருப்பதிகங்கள் பாடியருளியவண்ணமாய்ச் சிவபிரான் றிருக்கோயில்கடோறுஞ் சென்று, அம்மையப்பரை வணங்கி வந்தனரென்று 'நம்பியாண்டார் நம்பிதிருவந்தாதி,' 'பெரியபுராணம்,' 'காஞ்சிமாந்மியம்,' 'சீகாழிமாந்மியம்,' 'ஆலாசியமாந்மியம்,' 'உபமந்யுபக்தவிலாசம்,' 'அகஸ்தியபக்தவிலாசம்,' 'சௌந்தரியலகரி,' 'சிவரகசியம்' முதலான சிறந்தநூல்கள் உரைப்பக் காண்டுமன்றி, அவர்கையில் வேல் ஒன்று உளதென்று அவற்றுள் எந்த நூலும் உரைப்பக்காண்கிலம். அங்ஙனமாகவும் அவர் கையில் வேல் ஒன்று இருந்ததென்றும், அதனைத் திருமங்கைமன்னன் பிடுங்கிக்கொண்டனனென்றும்,வைணவர் கட்டிவிட்டகதைக்கு ஏதொரு சான்றுங் காணாமையின், அது வெறும் பொய்க்கதையேயாதல் திண்ணம். திருமங்கைமன்னன் திருஞானசம்பந்தர் காலத்தவன் அல்லனென்பதே உண்மையென்க.

என்று நாயகரவர்கள் மேலே ஆராய்ந்து காட்டியபடி, திருமங்கையாழ்வார், திருஞானசம்பந்தர்க்கு முந்நூறு ஆண்டு பிற்பட்டுக் கி. பி. பத்தாம்நூற்றாண்டின் துவக்கத்தே இருந்தவராகலின், அவர் திருஞானசம்பந்தர் காலத்தவரல்லரென்பதனைப் பலமெய்ச்சான்றுகள் கொண்டாராய்ந்து, மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் என்னும் எமது பெருநூலில் விளக்கிக்காட்டியிருக்கின்றேம். திருஞானசம்பந்தர்காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதிக் கண்ணதாகுமென்பதனைக் கல்வெட்டாசிரியர்களும் பிறரும் நன்காராய்ந்து நிறுவியிருக்கின்றனர். திருவாளர். சுந்தரம் பிள்ளையவர்கள் ஆங்கிலத்திற் பெரிதாராய்ந்தெழுதிய திருஞானசம்பந்தர் காலமும் (The Age of Thirujnanasambandha) என்னும் நூலில் இம்முடிபைக் கண்டுகொள்க.

## வைணவர் கட்டிய வேறு சில பொய்க்கதைகள்

இனி, அறிவாளிகள் கண்டு நகைத்து அருவருக்கத்தக்க வேறு சில பொய்க்கதைகளையுங் கற்பித்து, அவ்வாற்றாற் சைவசமயத்தை இழிவுபடுத்த முயன்ற வைணவரின் தகாச்செயல்கள் சிலவற்றை நாயகரவர்கள் எடுத்துக்காட்டி மறுத்திருக்கின்றனர்; அவை வருமாறு:

அவற்றுள், வைணவ ஆழ்வார்கள், சிவவாக்கியர் என்னுஞ் சிவ ஞான முனிவரைத் திருத்தி வைணவராக்கினர் எனக் கட்டியகதை ஒன்று; இதற்கு ஏதேனும் ஒரு சான்றுண்டா? சிறிதுமே இல்லை. சிவவென்னும் மூலமந்திரத்தை எந்நேரமுஞ் சொல்லிக்கொண்டிருந்த காரணம்பற்றியே சிவவாக்கியர் 'சிவவாக்கியர்' என்னுஞ் சிறப்புப் பெயர்பெற்றார். இம் முனிவர், பார்ப்பனரின் பொருள் அற்ற புல்லிய வினைகளையும், அவர்தஞ் சாதிச்செருக்கையும், அவர் செய்து போதருஞ் சிறுதெய்வவணக்கத்தையும் பலவகையாலும் மறுத்து, எல்லாம் வல்ல சிவத்தை வழிபட்டு உய்யும் உண்மைஞானத்தையே வலியுறுத் திப் பல தண்டமிழ்ப்பாடல்களைப் பாடியிருக்கின்றார். அவற்றுள் ஒன்று இது:

"குண்டலங்கள் பூண்டுநீர் குளங்கடோறும் மூழ்குவீர்
மண்டுகங்கள் போலநீர் மனத்துமாசு அறுக்கிலீர்,
மண்டையேந்து கையரை மனத்திருத்த வல்லிரேற்
பண்டைமால் அயன்றொழப் பணிந்துவாழலாகுமே"

இதனையொத்த பல உண்மைஞானப் பாடல்களைப்பாடிச் சிவவழிபாட் டின் ஏற்றத்தை எடுத்தியம்பிவந்த சிவவாக்கியரைப், பிறந்து இறந்து உழன்ற கண்ணனையும் இராமனையும் பாடிய ஆழ்வார்கள் திருத்தின ரென்பது அறிஞரால் எள்ளி நகையாடற்பாலதா யிருக்கின்ற தன்றோ? சிவவாக்கியர் தம் வாழ்நாள்முழுதுஞ் சிவஞானச் செல்வராய் விளங்கினமையாலன்றோ தாயுமான சுவாமிகளும்,

"கண்டதுபொய்என்று அகண்டாகாரசிவம் மெய்யெனவே
விண்டசிவவாக்கியர்தாள் மேவுநாள் எந்நாளோ"

என்று தமதருமைத் திருப்பாட்டில் அவரைச் சிறந்தெடுத்துப் பாராட் டினர். இதனாற் சிவவாக்கியர் உண்மைச் சிவஞான முனிவராதலும், அவர் தாயுமான சுவாமிகள் காலத்திற்கு முன்னிருந்தவராதலும் நன்கு பெறப்படுதல் காண்க. மற்றுச், சிவவாக்கியர் வைணவ ஆழ்வார் கள் காலத்து இருந்தார் என்பதற்காதல், அவர் ஆழ்வார்களாற் றிருத் தப்பட்டு வைணவமதத்தைத் தழீஇயினார் என்பதற்காதல் வைண வர்கள் ஏதொரு சான்றுங் காட்டாமல், தாமாகவே கட்டிச்சொல்லும் பொய்க்கதையை ஆராய்ச்சிவல்ல அறிஞர் ஒரு பொருட்டாகக் கொள் ளாரென்பது.

இனி, மேற்காட்டிய கட்டுக்கதையினும் பார்க்க நகையாடி இழிக் கத்தக்க மற்றொரு பொய்க்கதையினை வைணவர் புனைந்திருக்கின்ற

னர். அதாவது: ஓர் ஆழ்வார் தமது காலிலிருந்த கண்ணூற், சிவபிரானது நெற்றிக்கண்ணைப் பழுதுபடுத்தி அவரைவென்றனராம். எல்லார்க்கும் முகத்திலேதான் கண்ணிருக்கக்காண்கின்றோம்; மற்று இவ்வாழ்வார்க்கோ காலிலே கண்ணும்; ஈது எத்துணைப்படுபொய்! எல்லா உலகங்களையும் இயங்கியற்பொருள் நிலையியற்பொருள்களையும் நெற்றிக்கட்பொறியொன்றினாற் சுட்டுச் சாம்பராக்கவல்லவன் என்று பைபலாத உபநிடதத்தில் வழுத்தியுரைக்கப்பட்ட பிறப்பு இறப்பு இல்லா எல்லாம்வல்ல சிவத்தின் நெற்றிக்கண்ணைக், கடவுள் இலக்கணமே இன்னதென்றறியாமற் பிறந்திறந்து எய்த்த மக்களைக் கடவுளாக வணங்கிப்பாடிய ஓர் ஆழ்வார் பழுதுபடுத்தி வென்றனரெனக் கரைந்தது எத்துணை இறுமாப்பும் பேதைமையுமாயிருக்கின்றது!

இன்னும், இங்ஙனமே, ஓர் ஆழ்வார் பாண்டியன் அவைக்களத்தேசென்று அவன் அங்கே தூக்கியிருந்த பொற்கிழியை அறுத்துத், திருமாலையே முழுமுதற் கடவுள் என்று நாட்டினரெனவும், இன்னும் ஓராழ்வார் தாம்பாடிய பாடல்களைக்கொண்டு மதுரையில் வீற்றிருந்த சங்கப்புலவர்களை வென்றனரெனவும் வைணவர்கள் பொருந்தாப் பொய்க்கதைகள் கட்டிவிட்டிருக்கின்றனர். இக் கதைகளுக்கு ஒரு சிறுசான்றுதானும் நூல்களிலாவது கல்வெட்டுகளிலாவது காணப்படாமையினாலும்; வைணவர்கள் பாண்டியன் அவையில் திருமாலையே முழுமுதற் கடவுளென நாட்டியது மெய்யாயின், பாண்டிய மன்னன் வைணவமதத்தைத் தழுவி மதுரையிலுள்ள சிவபிரான் கோயிலைத் திருமால்கோயிலாக மாற்றியிருப்பனாகலானும்; ஆழ்வார்கள் காலத்திற்கு முன்னும் பின்னும் இன்றும் மதுரையிலுள்ளது சிவபிரான்கோயிலேயாதல் நூல்களாலுங் கல்வெட்டுகளாலும் நன்கு விளங்குதலாலும்; சங்கத்தவர்களை வெல்லத்தகுந்த செந்தமிழ்ச் சுவையும் முழுமுதற்கடவுள் நம்பிக்கையும் ஆழ்வார்கள் பாடல்களிற் காணப்படாமையோடு அவை அவ்விருவகையிலுஞ் சங்கத்தார் மெய்யே கிளந்துபாடிய செந்தமிழ்ச் செய்யுட்களுக்கு இறப்பத்தாழ்ந்த நிலையினவாயுமிருத்தல் தெற்றெனத் விளங்கலானும் வைணவர் கட்டிய இக் கதைகள் முழுப்பொய்யேயாதல் துணியப்படும்.

மேலுஞ், சங்கத்தார் காலத்திலெல்லாந் திருமால் வணக்கஞ் சைவசமயத்தின் உள்ளடங்கியேயிருந்தது. சங்ககாலத்து நூல்களிலெல்லாஞ் சிவபிரானுக்கே முதன்மை சொல்லப்பட்டிருக்கின்றது. ''ஏற்றுவலனுயரிய எரிமருள் அவிர்சடை, மாற்றருங்கணிச்சி மணி

மிடற்றோனும்" என்னும் புறநானூற்றுச்செய்யுளையும், "தொடங் கற்கட்டோன்றிய முதியவன் முதலாக, அடங்காதார் மிடல்சாய அமரர்வந்து இரத்தலின்" என்னுங் கலித்தொகைச் செய்யுளையும் உற்றுநோக்குக. சங்கத்தார் காலத்தை அடுத்துத் தோன்றிய சிலப் பதிகாரம், மணிமேகலை என்னுஞ் செந்தமிழ்ப் பெருங்காப்பியங் களிலுஞ் சிவபிரான் முதன்மையே சொல்லப்பட்டிருத்தல் காண்க.

வைணவஞ் சைவத்தினின்று வேறாய்ப்பிரிந்ததும், வைணவத் திற்கென்று தனிநூல்களுந் தனியாழ்வார்களுந் தோன்றியதுஞ் சைவசமயாசிரியர் காலத்திற்குப் பின்னரேயாம்; அதாவது கி. பி. எட் டாம் நூற்றாண்டிலிருந்தேயாம். இவ்வெட்டாம் நூற்றாண்டு முதற் றோன்றிய ஆழ்வார்கள், கி. பி. முதல்நூற்றாண்டுக்கு முன்னிருந்த சங்கத்தார்களை வென்றாரென்பது, "யான் என் முப்பாட்டன் திரு மணத்திற் பந்தற்காலைப் பிடித்துக்கொண்டு நின்றேன்" என்னும் ஒரு சிறுவனின் பொய்யுரையினும் பார்க்கப் படுபொய் நிறைந்ததாயிருக் கின்றது! இன்னும் வைணவ ஆழ்வார்களின் காலநிலையுஞ், சைவசம யத்தின் பண்டைமாட்சியும் மாணிக்கவாசகர் வரலாறுங் கால மும் என்னும் நூலில் மிகவிரித்து விளக்கப்பட்டிருக்கின்றன.

இனிச், சிவனடியாராகிய குலோத்துங்கசோழவேந்தனைக் கூரத் தாழ்வார் வென்றுவிட்டதாக வைணவர்கள் ஒரு பொய்யுரை கூறிவரு கின்றனர். ஆனால், உண்மையாக நடந்ததுவருமாறு: குலோத்துங்க சோழவேந்தன்ஒட்டக்கூத்தர்பாற் றமிழ்க்கல்விபயின்று அதிற்பெரும் புலமைவாய்ந்து திகழ்ந்ததுடன், சைவசித்தாந்தப் பொருள்களையுந் தென்மொழி வடமொழிகளில் நன்காராய்ந்து அவற்றின் முடிபு கண்டவன். அவ்வேந்தன்காலத் திருந்த இராமாநுசர் என்பவர், வட மொழி தென்மொழிகளில் முன்னாசிரியர் அனைவருஞ் சிவபெரு மான் ஒருவரே முழுமுதற்கடவுளென ஆராய்ந்து தெளித்துவைத்த மெய்ந்நூல்களின் மெய்வழக்கிற்கு முற்றும் மாறாகத், திருமாலையே முழுமுதற்கடவுளென நாட்டுதற்கு விழைந்து, வேதங்கள் உபநிடதங் கள் இதிகாசங்கள் புராணங்களிற் போந்த சொற்கள் சொற்றொடர்கள் கதைநிகழ்ச்சிகள் முதலானவைகளை யெல்லாந் தாம் விரும்பியபடி திரிபுபடுத்திச், சிவபிரான் மேலனவாயிருந்தவைகளுக்கெல்லாந் திரு மால் மேலனவாகப் பொருள்செய்து, பொய்யான கொள்கைகளை இத்தமிழ்நாடெங்கணும் பரப்பி வரலாயினர். இது தெரிந்த குலோத் துங்கசோழன், "சிவபிரானுக்கு மேலதாய் எதுமில்லை" என்னும் ஒரு

சொற்றொடரை எங்குமெழுதிப்பரப்பி, அதற்கு மாறாகப்பேசுவார் எவராயினும் அவரைப் புலவர்பேரவையில் வருவித்து, அவரொடு நடுவுநிலைபிறழாது வழக்கிட்டு, அவர் அவ்வழக்கிற் றோல்வியடைந்த பின் அங்ஙனந் தோல்வியுற்றார்பாற் "சிவத்துக்குமேல் ஏதுமில்லை" என்று எழுதி வாங்கிவந்தான். இவ்வாறு குலோத்துங்க வேந்தன் செய்துவருதலை நன்கறிந்தும், இராமாநுசர் அம்மன்னனுடன் நேரே சென்று வழக்கிட்டால் தமது கொள்கை வெற்றி பெறாதெனக் கண்டு, அவன்பாற் செல்லாமலே மறைவாய்த் தமது கொள்கையைப் பரவச்செய்துவந்தனர். இதுகண்ட மன்னர்பிரான், இராமாநுசருடன் நேரே வழக்கிட்டு அவரது கொள்கையின் பொய்ம்மையை உலகிற்கு வெளிப்படுத்தி உதவிபுரிதல்வேண்டித், தன் வேவுகாரரை அவர்பால் விடுத்தனன். அரசன் தம்மை அழைத்தற்கு வேவுகாரரை விடுத்திருத்தலை, முன்னதாகத் தம்மாணவர் வாயிலாகத் தெரிந்ததும், இராமாநுசர் தாம் பூண்டிருந்த காவியுடையினைக் கழற்றி விட்டு, வெள்ளாடையடுத்து வேறுநாடு சென்றுவிட்டனர்.

அது தெரிந்த அவர்தம் மாணவர் கூரத்தாழ்வார் இராமாநுசரைப் போல் உடைமுதலியனபூண்டு, பெரியநம்பியென்பவரைத் தம்மைப் போல் உடை அணியச்செய்து, தமக்குரிய வைணவர் கூட்டத்துடன், குலோத்துங்கசோழன் அவைக்குச் சென்றனர். அவர்களைக் கண்டதும், அரசன், திருமால் முழுமுதற்கடவுள் அல்லாமையுஞ் சிவபிரானே முழுமுதற்கடவுளாதலுந் தெற்றெனப் பிரிந்துவிளங்க அரநத்தாசாரியார் இருப்புப்படியேறி உறுதிப்படுத்திச்சொல்லிய பொருள்களை ஒவ்வொன்றா எடுத்துச்சொல்லி அவைகளை மறுக்குக்கும்படி, உடையவர்கோலத்தில் நின்ற கூரத்தாழ்வாரையுங், கூரத்தாழ்வார் கோலத்தில் நின்ற பெரியநம்பியையுங் கேட்க, அவ்விருவரும் அவற்றிற்கு விடை கூறமாட்டாராய்க் கலங்கிநின்றனர். அதுகண்ட அரசன், "சிவத்துக்குமேல் ஏதும் இல்லை" என்று எழுதித்தரும்படி அவர்களைக்கேட்க, அவர்கள் குறும்பாய்ச் "சிவத்துக்குமேற் பதக்கு" என்று எழுதித்தந்தனர். 'சிவம்' என்னுஞ் சொல்லுக்குக் குறுணி என்னும் ஓர் அளவுப்பொருளும் உண்டாகலின், அதற்கு அரசனுங் கற்றார்அனைவருங் கொண்ட முழுமுதற்கடவுள் என்னும் பொருளை எளனஞ்செய்தொழித்து, அச்சொல்லுக்கு அருகி எங்கோ கொள்ளப்படுங் குறுணியென்னும் பொருளை வினையமாய்க்கொண்டு, "சிவத்துக்குமேற் பதக்கு" என்று அவர்கள் இகழ்ச்சியாய் எழுதித்தந்ததைப்

தீமைகளேயும் பயவாநிற்கும். பொருள்படைத்த செல்வர்களில் எத்தனேபேர் கட்குடித்தும் வேசிகளே மருவியும் ஏழைமகளிரைக் கற்பழித்தும் நல்லோர்க்குத் தீது செய்துந் தந் தீயசெயல்கட் கிசையாதவரைக் கொலே புரிந்தும் அழிவழக்காடி எளியோர் உரிமைகளேக் கவர்ந்தும் இக்கொடுஞ்செயல்கட்குக் கருவியாக அரசியலில் உயர்நிலேகளே வலிந்து பெற்றுந் தமது பொருளேப் பாழாக்குகிருர்கள்! அங்ஙனமே கல்வியறிவைப் பெற்றவர்களில் எத்தனேபேர் தாம் அரிதிற்பெற்ற அவ்விழுப் பொருளே மேலு மேலும் பெருக்காமல், அல்லும் பகலும் அரும்பெரும் பொருள்களே ஆராயாமல், அருமையாய் ஆராயினும் ஆராய்ந்தவைகளேப் பிறர்க்கு அறிவுறுத்தாமல், தாங் கற்ற சிறிதைப் பெரிதாகத் தாமே இறுமாந்து மதித்துத், தம்மினும் மிகக்கற்று அடங்கித் தாம் அறிந்த மெய்ப்பொருள்களேச் சொல்லாலும் நூலாலும் உலகிற்குப் பயன்படுத்துஞ் சான்ருேரைக் கண்டு வாழ்த்தாமல் வயிறெரிந்து அவரது அறச்செயலுக்கு மறச்செயல்செய்து தீராப்பழியினேயுந் தீவினேயினேயும் பெருக்குகின்றனர்! இன்னுங், கற்றவர்களில் வேறு எத்தனேபேர் பாராட்டத் தகாத செல்வர்களேப் பாராட்டியும் அவர் இட்ட குற்றேவல் செய்தும் அவர் தங் காமக்கிழத்தியர்க்குத் தூது போகியும் அவர் வீசுங் காசுக்குந் தூசுக்குங் காத்துநிற்கின்றனர்! உண்மையான் நோக்குங்காற் செல்வமுங் கல்வியும் அறநெஞ்சம் உடைய துறவோர்க்குத் தாம் இன்றியமையாது வேண்டற்பாலனவே யல்லால் அவரல்லாத பிறர்க்கு வேண்டற்பாலனவாகா. அறநெஞ்சம் இல்லார் கைப்படின் அவையிரண்டும் உலகிற்குத் தீமையே விளேப்பக்காண்டும்; மற்று, அறநெஞ்சம் உடையார் கைப்படிலோ அவை, அவையிரண்டிலும் வறியார்க்குப் பல்லாற்ருனும் நிலேயான பெரும்பயனேப் பயப்பக்காண்டும். ஆகவே, அறநெஞ்சம் வாய்ந்த துறவோர்க்குக்

கல்வியொடு செல்வமும் வாய்ப்பின், அஃது உலகத்த வர்க்குப் பலவகையாற் பயன்பட்டு அவரை நல்லராய் அறிவிற்சிறந்தாராய் மிடியின்றி வாழச்செய்யும் என்க.

---

## கானத்தோகை தேவமணி கதை

கானத்தோகை என்னும் மங்கை நுண்ணறிவும் பேரழகும் வாய்ந்தவள். ஆனால், அவளுக்கு வாய்த்த தந்தையோ தன் உழைப்பினால் ஏராளமான பொருளைத் தொகுத்து, அப்பொருளையே தெய்வமாக நினைந்து களிப்பவன்.

தேவமணி என்னும் இளைஞன், கல்வியிலுஞ் சிறந்த நடையிலும் புகழ்பெற்ற தொன்றாயினும் பொருள் இழந்து நொந்துபோன ஒரு குடும்பத்திற் பிறந்தவன்; கல்வியிலும் நல்லொழுக்கத்திலும் பெருந்தன்மையிலும் மிக்கவன்.

இவ்விளைஞனுக்கு இருபதாம் ஆண்டு நடக்கையில் இவன் கானத்தோகையென்னும் மங்கையைக் கண்டு அவளொடு பழக்கங்கொள்ளலானான்; அப்போது கானத் தோகைக்கு அகவை பதினைந்து. இம்மாதின் தந்தை யின் வீட்டுக்குச் சிறிது தொலைவிலேயே, இவனது இல்லம் அமைந்திருந்தமையால், இவன் அடுத்தடுத்து அம் மடந்தையைக் காணுதற்கு அமயம் வாய்த்தது. இவன் அழகிய உருவம் உடையனாயிருந்ததுடன் இனிதாக உரையாடும் இயல்பினனாயும் இருந்தமையால், எக்காலத் தும் சலிக்க முடியாததான தன்னைப் பற்றியதோர் அழுத்தமான எண்ணத்தை அவள் நெஞ்சத்திற் பதித்து விடலானான். இவனும் அவளது வனப்பினாற் கவரப் பட்டது சிறிதன்று. இவர் இருவரும் நெடுநாட் பழகப் பழக இன்னும் இன்னும் உயர்ந்த அழகிய இயல்புகளை ஒருவர் ஒருவரிற்கண்டு இன்புறலாயினர்; இதிலிருந்து

படிப்படியே இவர் ஒருவர்மீதொருவர் கொண்ட காத லானது, இவர்தம் வாழ்நாள் எல்லையளவும் இவரைத் தொடர்புபடுத்தி நிற்கவல்லதாயிருந்தது.

அஃது அவ்வாறு நிகழ்கையிற் கானத்தோகையின் தந்தைக்குந் தேவமணியின் தகப்பனுக்கும் இடையே கலகம் விளையலாயிற்று. ஒருவன் தனக்குள்ள செல்வ வளத்தால் தன்னைத்தானே மிகுதியாய் உயர்த்துப்பேச லாயினன்; மற்றவன் தனக்குள்ள பிறப்பின் மேன்மை யால் தன்னைத்தானே பெரிதும்பாராட்டி மொழியலா யினன். கானத்தோகையின் அப்பனோ, தேவமணியின் றந்தைமேற் பெருஞ்சினங்கொண்டு, அதுகாரணமாக அவன் புதல்வனான தேவமணிமேல் வெறுப்புக்கொள்ள லானான். அதிலிருந்து அவன் தனது இல்லத்திற்கு வர லாகாதென்று தடைசெய்ததோடு, அவனைத் தன் மகள் இனிக் காணலாகாதென்றுங் கட்டுப்படுத்தினான். இன் னும், இக்காதலர் இருவருந் தாம் ஒன்று சேருங்காலத் தை நோக்கி நிற்பதறிந்து, அவர்க்குள் இனி ஏதொரு தொடர்பும் உண்டாகாமல் தடுத்துவிடுதற்காகச், செல்வ முந் தகுதியானதோற்றமும் வாய்ந்த ஏனையோர் இளைய ஆடவனைத் தெரிந்தெடுத்து, அவனையே தன் மகளுக்கு மணமகனாக்கக் கானத்தோகையின் றந்தை உறுதிசெய் தான். அதன்பின் அவன் தன் புதல்விக்குத் தனது கருத்தினைத் தெரிவித்துத், திருமணமானது இன்ன தொருநாளில் நடத்தப்படல் வேண்டுமென்றுங் குறிப் பிட்டான். தன் றகப்பனின் தலைமைச் செருக்கைக் கண்டு வெருக்கொண்ட கானத்தோகை, அவனாற் பொருத்தமுள்ளதாகக் கருதப்பட்ட ஒரு மணவினைக் குத் தான் குறுக்குச்சொல்வதிற் பயனில்லை யென்று கண்டு வாய்பேசாதிருந்தனள். அவள் அங்ஙனம் வாய் பேசாதிருந்ததனையே அவளது உடன்பாடாகப் பிழைத் துணர்ந்த அவடன் றந்தை, அத்தகையதொரு சிறந்த

ஏற்பாட்டில் தன் றந்தையின் கருத்துக்கு இசைந்து நடக்க ஒருப்பட்டதே ஒரு கன்னிப்பெண்ணுக்குத் தக்க ஒழுகலாறாகுமென்று அவளைப்புகழ்ந்து பேசினான். பிறகு, இங்ஙனம் அவன் நடத்தக் குறித்த மணவினைச் செய்தி தேவமணியின் செவிக்கு எட்டியது. காதலாற் கட்டுண்டார்க்கு இயற்கையே உண்டாகும் பலவகையான இன்னா எண்ணங்களால் தேவமணியின் நெஞ்சங் குழம்பியது; அதனால், அவன் கீழ்க்கண்ட கடிதம் ஒன்றனை வரைந்து அதனைக் கானத்தோகைக்குப் போக்கினான்:

"என்னருமைக் கானத்தோகையைப்பற்றி யான் கொண்ட நினைவு ஒன்றே எனக்குச் சில ஆண்டுகளாக இன்பம் பயப்பதாய் இருந்தது. ஆனால், இப்போதோ அஃது என்னால் தாங்க வியலாத மனநோயினைத் தருவதாய் மாறிவிட்டது. நீ பிறன் ஒருவனுக்கு உரியளாய் இருத்தலை இனி யான் உயிரோடிருந்து பார்க்கவேண்டுமா? நாம் ஒருங்குகூடிப் பேசியிருந்த நீரோடை மருங்கும், விளைபுலங்களும், பசும்புல் நிலங்களும் இப்போதெனக்கு ஆற்றொணாத் துயரத்தைத் தருகின்றன. நீ உலகத்தில் நீடு இனிதுவாழ்க! ஆனால், கீழ்க்குறிப்பிட்ட ஓர் ஆடவன் என்றோ இந்நிலவுலகில் இருந்தானென்பதை மறந்துவிடு! தேவமணி."

இக்கடிதம், எழுதிய அன்றைமாலையே கானத்தோகையின் கையில் அது செலுத்தப்பட்டது; அதனை நோக்கியதும் அவள் உணர்வற்று வீழ்ந்தாள். மறுநாட் காலையில் உணர்வுகூடி எழுந்ததும், அவள் ஏக்கங்கொள்ளத்தக்க செய்தியொன்று வந்தது: தேவமணி யென்பான் சென்ற நள்ளிரவில் தன் படுக்கையறையைவிட்டு வெளிக்கிளம்பினவன் எங்குச் சென்றானென்பது தெரியவில்லை; அவனைப்பற்றி ஏதேனுந்தெரியுமா எனக் கேட்டறியும்பொருட்டு ஒருவர்பின் னொருவராய் இரண்டு

மூன்று ஒற்றர்கள் தன் நந்தையின் இல்லத்திற்கு வந்து சென்றார்களென்பதே அச் செய்தியாகும். சின்னாட்களுக்குமுன் அவனது உள்ளத்தைக் கவிந்த பெருந்துயரானது, அவனதுயிரைக் கொள்ளைகொண்டதோவெனக் கருதி அவர்கள் அஞ்சலாயினர். தனது திருமணத்தைப் பற்றிய செய்தியல்லாமல் வேறு ஏதும் அவனைக் கடைப்படியான அம்முடிவுக்குச் செலுத்தியிராதெனக் கருதிக் கானத்தோகை ஆற்றாத்துயரில் அழுந்தினள். அதனால், அவள் தன் நந்தை வேறொருமணமகனைக் குறிப்பிட்டுப் பேசிய பேச்சிற்குத் தான் படிந்து செவிசாய்த்ததே ஒரு பெருங்குற்றமென்று தன்னைத்தானே நொந்துகொண்டதுடன், புதிதாகக் குறிப்பிடப்பட்டவனை தன் தேவமணியைக் கொலை புரிந்தவனாயினனென்றும் எண்ணி ஏங்கினாள். தன் நந்தை குறித்துச்சொல்லிய திருமணங் குற்றத்திற்கும் அச்சத்திற்கும் ஏதுவாய் முடிந்தமையால், அத்தகையதொன்றிற்குத் தான் இணங்குவதைவிடத், தன் நந்தையின் மனத்தாங்கலுக்கும் அதனால் விளையுந் தீங்குகளுக்குந் தான் உள்ளாவதே சாலச்சிறந்ததெனத் தீர்மானஞ்செய்தாள். அதன்பின், தன் நந்தை கூறிய திருமண ஏற்பாட்டிற்குத் தான் ஒரு சிறிதும் இணங்கல் முடியாதென்றும் ஒரேபிடியாய் மறுத்துக்கூறிவிட்டாள்.

கானத்தோகையின் நந்தையோ தேவமணி ஒழிந்து போனதைப்பற்றி மகிழ்ச்சியுற்றவனாயுந், தனது குடும்பப்பொருளில் ஒரு பெருந்தொகையான பரிசப்பணந் தனக்கு மிச்சமானதைப்பற்றி உவகைக்கடலில் அமிழ்ந்தினவனாயும் மாறுதல் எய்தினமையால், தன் மகள் தான் குறித்த மணத்திற்கு உடம்படாது முற்றும் மறுத்துக் கூறியதற்காகச் சிறிதுங்கவலைப்பட்டிலன். தான் குறித்த மருமகனும் இம்மணம் ஒரு வசதிக்காக நிகழ்வதேயன்றிக் காதலால் நிகழ்வதன்றெனக் கண்டுகொண்டமையால், அவனுக்கு அவன் அம்மணம் நடவாதுபோன

மைக்காக மன்னிப்புச் சொல்லிவிடுவதும் எளிதாகவேயிருந்தது.

கானத்தோகையோ இப்போது கடவுளையே எந்நேரமும் நினைந்து அவன்றிருவடிக்குத் தொண்டு ஆற்றுவதிலன்றி வேறொரு வகையில் தன்னை அத்துணைவருத்திய அம்மனத்துயர் தீர்தற்கு வழிகண்டிலள். சில்லாண்டுகளுக்குப் பின் தனது மனத்துயரின் கொடுமை தணிந்து, தன் எண்ணங்கள் ஓர் அமைதியுற்றபின், அவள் தனது எஞ்சிய வாழ்நாளைத் துறவோர் திருமடம் ஒன்றிற்சென்று கழிக்க உறுதிசெய்தாள். அவள் தந்தையும் அவள் கொண்ட எண்ணத்திற்காகச் சிறிதும் வருந்தவில்லை; ஏனென்றால், அஃது அவனது குடும்பச்செலவினை மிச்சப்படுத்துதற்கு ஓர் வாயிலாகுமன்றோ? ஆகவே, அவன் தன் புதல்வியின் கோரிக்கைக்கு உடனே இசையலானான். இசைந்து, அவளது இருபத்தைந்தாம் ஆண்டில்—அவடன் பேரெழில் மிகுந்து முகிழ்த்துத் தோன்றும் அக்கட்டிளமைப் பருவத்தில், அடுத்துள்ளதொரு நகருக்கு அவளை அழைத்துச்சென்று. அவளை வைத்தற்குத்தக்க துறவு மாதர் வாழும் ஒரு திருமடத்தை அவட்குக் காட்டினான். காட்டக், கானத்தோகை அதன்கண் இருந்துவிடுதற்கு மனம் உவந்தமைகண்டு அங்கே அவள் இருத்தற்கு வேண்டும் ஏற்பாடுகளெல்லாஞ் செய்துவைத்துப்போயினான்.

இனி, இத்திருமடத்திற்குத் தலைவராய் அமர்ந்த முனிவர் கடவுள் நேயத்திலும் நன்னடையிலுஞ் சிறந்து புகழோங்கப்பெற்றவர் ஆவர். கானத்தோகை சேர்ந்த இத் திருமடம் உரோமமுனிவர்க் குரிய தொன்றாகையால், இதிற்சேர்ந்தவரில் ஆற்றாமனநோய்கொண்டாரும் மனக்கவலை அடைந்தாரும், இதன் தலைவரான குருமுனிவரிடஞ்சென்று, தம் உள்ளத்தே அடைத்துவைத்த துயரையுங் கவலையையும் வாய்திறந்து வெளிவிட்டுச்

சொல்லி, அவர்பாலிருந்து மன்னிப்பும் ஆறுதலும் பெறுவது வழக்கம். ஆகவே, அழகியாளான நம் கானத்தோகை புகழ்பெற்ற இம் முனிவர்பாற்சென்று தன்னுள்ளத் துற்றதைமொழிந்து தானும் அவர்பாலிருந்து மன்னிப்பும் ஆறுதலும் பெறக்கருதினாள். ஈதிங்ஙனம் இருக்க, இப்போது நாம் தேவமணி எவ்வாறாயினான் என்பதனை எடுத்துக்கூறுதற்குத் திரும்புவோம்.

மேற்சொல்லியவாறு தேவமணி தனது இல்லத்தை விட்டுப் புறப்பட்டதும், அன்றை விடியற்காலையிலேயே, இப்போது கானத்தோகை தங்கியிருக்கும் நகருக்குப் போந்து, அதன்கண் உள்ளதொரு துறவோர் திருமடத்தில் தானுஞ் சேர்ந்துவிடலானான். அம்மடத்திற்சேர்வோர், சில தனிப்பட்ட காலங்களில் தம்மையின்னாரென்றெவருந் தெரிந்துகொள்ளாத வகையில் மறைமுகமாயிருப்பது வழக்கமாகையால், தானும் அங்ஙனமே அவருள் ஒருவனாயிருந்துவிடத் தேவமணி விழைந்தான். கானத்தோகையைக் குறித்துத் தான் ஏதும் உசாவுதல் ஆகாதென்றுந் தனக்குள் அவன் ஓர் உறுதி செய்துகொண்டான். அவள் தன் றந்தையால் ஏற்படுத்தப்பட்ட நாளில், தனக்கு எதிரியான ஒருவனொடு மணம் பொருத்தப்பட்டிருப்பள் எனவே அவன் எண்ணிவிட்டான். தனது இளமைப்பருவத்தில் அவன் கல்வியில் தேர்ச்சியுற்றதெல்லாந், தான் முழுதுஞ் சமயத்தொண்டு ஆற்றுதற்பொருட்டே யாகலான், அவன் இப்போது துறவோர் குழாத்திற்சேர்ந்து தான் கருதிய அத்தொண்டினையே செய்துகொண்டிருக்கலானான். சில்லாண்டுகள் செல்ல அவன் தன் தூயதுறவொழுக்கத்திற் பெயர்பெற்றதுடன், தன்பால் உரையாடுவார்க்கெல்லாம் இறைவனிடத்து அன்பு மீதூரச்செய்தும் வந்தனன். இத்தன்மையனான இத்துறவிபாற்போந்தே கானத்தோகை தன்னுள்ளக்கிடக்கையை வாய்விட்டுச் சொல்லி ஆறுதல்

பெறுதற்கு முனைந்தாள்; ஆனால், இவளுக்காவது அத் திருமடத்தின் தலைவரையுள்ளிட்டு ஏனை எவர்க்காவது இத்துறவியின் பெயரேனுங் குடும்பச்செய்தியேனுஞ் சிறிதுந் தெரியா.

அன்புக்கினிய மகிழ்ந்த உள்ளத்தவனான தேவமணி இப்போது "அப்பன் பிராஞ்சு" என்னும் பெயர் பூண்டிருந்தமையானும், நீண்ட தாடியும் மழித்த தலையுந் துறவாடையும் உடையனாயிருந்தமையானும், முன்னை உலகியல்நடையி லிருந்த அவனை இப்போது துறவு நடையிலிருக்கின்றானெனத் தெரிந்துகொள்வது இயலாததாயிற்று. இவன் ஒருநாட்காலையிற் பாவ அறிவிப்புக்கேட்கும் இருக்கைமேல் ஒரு தனியிடத்தில் அமர்ந்திருந்த நேரத்திற், கானத்தோகை அவனெதிரே முழந்தாளிட்ட நிலையிலிருந்து தன்னுள்ளத்துள்ளதைத் திறந்து சொல்வாளானாள். கள்ளம் இல்லாத் தன் வாழ்க்கை வரலாற்றினை அவள் சொல்லிக்கொண்டுவந்து, பிறகு அவனது தொடர்பு ஏற்பட்ட தனது கதையின் அப்பகுதியைக் கண்ணீர்வடித்தபடியாய்க் கூறத்துவங்கினாள்.

"எனது நடக்கையானது, என்னை அளவுக்கு மிஞ்சிக் காதலித்த ஒரு சிறு பிழையைத்தவிர வேறு பிழை செய்தறியாத ஒரு சிறந்த ஆண்மகனது சாவுக்குக் காரணமாயிருந்தது. அவர் உயிரோடிருந்த நாட்களில் யான் அவரை எவ்வளவு காதலித்தே னென்பதை இறைவன் அறிவான். அவர் இறந்துபோனபின்னும் அவரை நினைந்து யான் எவ்வளவு துன்பப்படுகின்றே னென்பதையும் அவனே நன்கறிவான்."

என்று இச்சொற்களைச் சொல்லுகையில், அவள் ஆறாய்ப்பெருகுங் கண்ணீருடன் தன் கண்களை ஏறிட்டு அம்முனிவரின் முகத்தைநோக்கினாள். இச்சொற்களைக் கேட்டதும், நெட்டுயிர்ப்பும் பொருமுதலும் வாய்ந்த தமது குரலை அவர் ஒருவாறு அமைதிப்படுத்திக்கொண்டு,

உறுதி செய்யப்பட்டதும் நீ காண்கிலேயோ?" என்று குமுதவல்லி மறு மொழி தந்தாள்.

"ஆம், எம்பெருமாட்டி, இவையெல்லாம் உன்னித்தேன்." என்று கூவினள் சுந்தராம்பாள்.

"நானும் அப்படியே உன்னித்தேன்." என்றாள் ஞானம்பாள், "ஓ, சமயக்குரவர்களே! ஆனால், நான் அவற்றிற் சிறிதும் ஐயுறவு கொள்ள வில்லேயே!—"

நடுவே குமுதவல்லி, "மாதர்காள், நாம் மிகவும் பாதுகாவலாய் இருக்கின்றோம் என்று நினைத்திருக்கும்போதே, நாம் உண்மையில் இடர்களாற் சூழப்பட்டிருக்கும் வகை இந்த உலகத்தில் எப்படி நேர்கின்றது பாருங்கள்! நம்மைகுறித்துக் கள்வர்கூட்டத் தலைவனுடைய நோக்கம் எதுவாயிருக்கலாம் என்று என்னால் அளவிடக்கூடவில்லை; ஆனால் அவன் ஏதோ மிகக் கொடியதுந் துயரமுள்ளதுமான இரண்டகஞ் செய்ய நினைத்தான் என்பதிற் சிறிதும் ஐயமே இல்லை. என்றாலும், நாம் தப்பிவந்ததைப்பற்றி நாமாக மகிழ்தலேபோதும்; பெண்காள், இப்போது நாம் இவ்விரவு தங்கியிருப்பதற்கு ஓர் இடம் எங்கே தேடுவதென்று நினைக்கவேண்டும்." என்றுரைத்தாள்.

மாலைக்காலத்து இருள் வரவரச் சூழ்ந்து வரலாயிற்று; மசங்கற் பொழுது நாகநாட்டரசியையும் அவள் பாங்கிமார் இருவரையுஞ் சூழ்ந்து கொண்டது; இவர்கள் சென்ற சிறுவழியானது வீடுகள் காணப்படாத ஒரு வெளியின் ஊடே செல்லுவதாகத் தோன்றியது. குதிரைகளோ ஒவ்வொருநொடியுந் தமது இளைப்பைப் பலபல அடையாளங்களாற் காட்டுவவாயின; அந்தநங்கையும் அவள்பாங்கிமாரும் அவ்வாறே மிகவுங் களைப்படைந்தனர். ஆகவே, அவர்கள் மெதுவாகச் செல்லலாயினர்; சிறிது நேரத்துள் அச்சிறுவழியானது ஓர் அகன்றபாதையிற் போய்ச் சேர்ந்தது. அவர்கள் நீலகிரி நகரத்திற்கு நெருங்கிச் செல்கின்றார்களோ, அல்லது தாஞ் செல்லவேண்டிய அந்நகரத்தை விட்டு வரவர அகன்று விலகிப்போகின்றார்களோ என்பதைச் சிறிதும் அறியாதவர்களாய்க் கெடுதிக்குத் துணிந்தே அப்பாட்டை நெடுகச் சென்றார்கள். என்றாலும், அவ்வளவு நல்லவழியின் கிட்ட எங்கேனுஞ் சிலகுடியிருப்புகள் இருக்கவேண்டுமென்றும், அல்லது அது விரைவில் ஓர் ஊர்க்காயினும் நகரத்திற்காயினுங் கொண்டுபோய் விடுமென்றும் உறுதியாக எண்ணினார்கள்.

உடனே சிறிது தொலைவில் ஒரு விளக்கு வெளிச்சம் மினுக்கு மினுக்கென்று தோன்றக்கண்டார்கள்; சிறிது நேரத்தில் ஒரு குடியானவன் மனையகம் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே தனக்குந் தன் பாங்கிமார்க்கும் அவ்விரவு தங்குவதற்கு இடம் உதவும்படி குமுதவல்லி கேட்

டாள்; தனது தோற்றத்தினுல் அவ்விடத்திற்கு உரியவள் என்று காணப்பட்ட நடுத்தர அகவையினள் ஆன ஒரு மாது அவ்வேண்டுகோளுக்கு அன்புடன் இசைந்தாள். கூலியாள் ஒருவன் அழைக்கப்பட்டான். களைப்படைந்த குதிரைகள் பணையத்துக்குட் கொண்டு சேர்க்கப்பட்டன; தாழ்மையானதாயிருந்தாலும் நேர்த்தியான அம்மனையின் கூடத்து அறையிலே அங்ஙனமே களைப்புற்ற அவ்வழிப்போக்கர்களுக்குத் திறமான சாப்பாடு கொண்டுவந்து பரிமாறப்பட்டது.

குமுதவல்லி எண்ணியபடியே, அன்புடன்வந்து முதலிற் கதவு திறந்த அம்மாது அவ்விடத்திற்கு உரியவள் என்று தெரிந்தது. அவள் ஒரு மலைநாட்டாள். ஆகையால், அவளிடத்திற் பேர் அழகின் அடையாளங்கள் இன்னும் இருந்தன; ஆனுலும், அவள் முகத்திலே கவலைக்குந் துன்பத்திற்கும் உரிய குறிகள் புலப்பட்டன. அவளோ ஒரு கைம்பெண்; முறையே பதினேழு பத்தொன்பது அகவை உள்ளவர்களாய்ப் பலகைமேல் உணவு கொண்டுவந்து பரிமாறிய இரண்டு இனிய அழகு வாய்ந்த பெண்கள் அவளுக்குப் புதல்விகள். அவள் கணவன் தன் வயலிலே நடந்துகொண்டுபோம்பொழுது, ஒரு கரும்பாம்பினுற் கடிக்கப்பட்டுச் சில ஆண்டுகள் முன்னே இறந்துபோனுன். அதுமுதல் அந்தக் காணியைப்பராமரிக்குங் கடமை முழுதும் அக் கைம்பெண்ணின் மேலதாயிற்று. ஆயினும், அவள் அதனைப் பயன்படும்படி நடத்திவந்தாள்; பொருள் அளவில் அவள் குறைசொல்வதற்கு ஒன்றும் ஏதுவில்லை.

உரையாடிக்கொண் டிருந்தபோது, நாகநாட்டரசி அவ்வன்புள்ள மாதைப்பற்றித் தெரிந்த வகைகள் இவ்வளவே. தன்னைப்பற்றியோ குமுதவல்லி தான் நீலகிரி நகரத்திற்குப் பயணம் போவதாகவுந், தான் வழிதப்பிவந்துவிட்டதனுலே தானுந் தன்தோழிமாரும் இவ்வுதவியைப் பெறவேண்டியதாயிற்று என்றும் மட்டுங் கூறினுள். அவள் சிறிதேனும் நல்லானைக் குறித்துப்பேசவில்லை; ஏனென்றால், அஞ்சத்தக்க நல்லானுல் தான் துன்புறுத்தப்பட்ட செய்திகளை அவள் அவ்வீட்டுக்காரிக்கு எடுத்துச்சொன்னுல், அக்கொள்ளைக்காரர் தலைவன் தன்னிடத்தில் விருந்தாய்வந்த அவளைத் தேடி வருவான் என்னும் அச்சத்தினுல் இம்மாது தம்மை இங்கே தங்க விடமாட்டாள் என்று அஞ்சினுள். இந்த மலைநாட்டு மாதினிடமிருந்து குமுதவல்லி தெரிந்துகொண்ட ஒருசெய்தி மனத்திற்குத் தளர்ச்சியைத் தருவதாயிருந்தது. அது, தான் நீலகிரிக்கு முப்பத்தைந்துகல் தொலைவில் இருப்பதாகத்தெரிந்ததே; ஆகவே தானுந் தன் தோழிமார்களும் அப்பஞ்சாலைத்தலைவன் வீட்டுவாயிலிலிருந்து ஓடிவந்தமையால், அப்போது தமக்கும் அம்மலைநாட்டுத் தலைநகருக்கும் இடையிலிருந்த வழியைத் தாம் இப்போது பின்னும் மிகுதிப்படுத்திக் கொண்டார்கள் என்பது புலனுயிற்று. ஆனுலும், இப்போது அதற்காகச்

செய்யக்கூடியது ஒன்றுமில்லை; மெய்யாகவே குமுதவல்லி, தாம் செவ்வையாகத் தப்பிவந்ததை எண்ணுமிடத்து இதற்காக மனம் வருந்தலாகாதென்று உணர்ந்தாள்.

நாகநாட்டரசியானவள் அவ்வீட்டுக்காரியின் முகத்திலே காணப்பட்ட கவலை துயரங்களின் அடையாளத்தை உன்னியாமல் இருக்கவில்லை; தன் கணவனை இழந்த வருத்தத்தின் வேறான மற்றொரு துயரத்தோடு அவை இயைந்தனவாய் இருக்கவேண்டுமென்று அவள் எண்ணாமல் இருக்கக்கூடவில்லை: ஏனென்றால், கணவனை இழந்ததால் உண்டான துயரமானது, இவ்வளவு காலத்திற்குப்பிறகு கனிந்து சிவநேயமாகமாறி அமைதி பெற்றிருக்குமென்று மனத்தின்கண் எண்ணினாள். அவளுக்கு இயற்கையாகவே உள்ள மேன்மைக்குணமானது அவள் அதனைப்பற்றி ஏதுங் கேளாமல் தடைசெய்தது. ஆனாலும், அடிக்கடி அந்நல்லவளை இரக்கத்தோடும் பரிவோடும் மனத்திற் கருதினாள். இப்போது இம்மலையநாட்டுமாதின் புதல்விகள் அவ்வீட்டினுள்ளே சிறந்த படுக்கை அறையிற் குமுதவல்லி, சுந்தராம்பாள், ஞானம்பாள் என்னும் மூவருக்கும் படுக்கைக்கு வேண்டிய வசதிகளை ஒழுங்கு படுத்தும் பொருட்டுக் கூடத்தறையினின்றும் போனவுடனே, இந்த நல்ல கைம்பெண்ணானவள் தானே தன் துயரமான தோற்றத்தைப்பற்றி விளக்கிச் சொல்லப்புகுந்தாள்.

"இப்போது நம்மை விட்டுப்போன அருமையான அவ்விரண்டு பெண்கள் மட்டுமே எனக்குக் கடவுள் அருள்பண்ணின பிள்ளைகள் அல்லர். இரண்டு ஆண்டுகளாக எங்களுடன் இல்லாமலிருக்கிற மற்றொரு பெண்ணும் உண்டு."—என்று சொல்லும்போதே அக் கைம்பெண் அழுதாள்.

"அப்பெண் உண்மையில் இறந்துபோயிற்றோ?" என்று குமுதவல்லி இரக்கம் நிரம்பிய மெதுவான குரலிற்சொன்னாள்: இதுபோல் மனஇரக்கமானது இசையின் இனிமை கலந்த மெதுவான குரலிற் சொல்லப்படுதல் என்றும் அரிதரிது.

"இல்லை, அம்மா, அறிவும் அழகும் மிகுந்த என் மரகதத்தைக் கொண்டுபோனது சாக்காடு அன்று. அஃது ஒரு துயரமானகதை;என்றாலும், அதனை உங்களுக்குச் சொல்லுகிறேன். மரகதம் என் பெண்மக்கள் மூவரில் மூத்தவள்: அவளுக்கு ஆண்டு—இன்னும் அவள் உயிரோடு இருந்தால்—இப்போது இருபத்தொன்று ஆகும். ஒருவரைப் புகழ்ந்து பேசுவது எனக்கு இயற்கை அன்று; ஆனாலும், உண்மையைச்சொல்லுவது எனக்கு முதன்மையாய் இருக்கின்றது; இந்தச் சாயங்காலம் உங்களை என் கண்கள் காணும் வரையில், இதற்குமுன் என் மரகதத்தைப்போல் அவ்வளவு அழகான ஒரு பெண்ணை நான் பார்த்ததேயில்லை. ஆம்—

அவள் அழகாயிருந்தது போலவே கற்பொழுக்கம் உள்ளவளுமாய் இருந்தாள்—அன்புள்ள மகள்—அவளை அறிந்தவர்கள் எல்லாராலும் அவள் நேசிக்கப்பட்டாள். அப்படிப்பட்ட களஞ்சியம்போல்வாளைக் கைப்பற்றுதற்கு எல்லாவகையிலுந் தகுதியுள்ளவனான இந்நாட்டுப் பணக்கார இளங்குடியானவன் ஒருவனுக்கு அவளை மணம்பொருத்துவதாக உறுதி செய்திருந்தது. அம்மா, பாருங்கள்! என் கணவனை இழந்தபிறகுங்கூட நான் ஆறுதல் அடைதற்குப் பலவழிகள் இருந்தன; எனக்கும் என் குடும்பத்திற்கும் நல்ல காலம் என்னும்படி பல குறிகளுங் காணப்பட்டன." என்று அம்மலையக் கைம்பெண் விடைகூறினாள்.

இதனை மிகவுங் கருத்தாய்க் கேட்டுவந்த குமுதவல்லி, "உங்கள் சொற்களால் எனக்கு முன்னமே தெரிந்தபடி, இவைகள் பிறகு எங்ஙனம் அவ்வளவு முழுதுங் கெட்டுப்போயிருக்கக்கூடும்?" என்று வினவினாள்.

"அம்மா, அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்," என்று தன் கன்னத்தில் ஒழுகின கண்ணீரைத் துடைத்துக்கொண்டே அம்மலையமாது மறுமொழிதந்தாள்; "அம்மா, ஒருகால் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்; ஆண்டுதோறும் முகமதியர் இரமசான் என்று சொல்லப்படுஞ் சிறந்த ஒரு நோன்பை ஒரு திங்கள் வரையில் நோற்றுவருகிறார்களே." என்று தொடர்ந்து உரைத்தாள்.

"நான் அதனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றேன்." என்று குமுதவல்லி கூறினாள்.

"நல்லது அம்மா, அந்த இரமசான் நோன்பு நோற்கிறபோது—அல்லது அதன் முடிவில் உள்ள ஒரு வழக்கத்தைப்பற்றி நீங்கள் ஒருவேளை தெரியாதிருக்கலாம். அதாவது: எங்கேனும் அகப்பட்ட அழகில் மிகச்சிறந்த ஒரு கன்னிப்பெண்ணைத் துருக்கிசுலுத்தானுக்குக் காணிக்கையாகக் கொண்டுபோய் விடுவதுதான். அதற்காக அடிமை விற்பவர்கள் இரமசானுக்குச் சில திங்கள் முன்னாகவே அழகிய பெண்களை உன்னிப்பாய்த் தேடித்திரிவார்கள்; சுலுத்தானது உவளகத்திற்குத் தெரிந்தெடுக்கப்படும்படி மற்றவர்களைப் போட்டியிற் பின்னிடச்செய்யும் அத்தனை அழகுள்ள ஒரு கன்னியைத் தாம் பெறும் நல்வினை உடையவர்கள் ஆகலாம் என்பது அவர்களுடைய ஆவல்." என்றாள் அக்கைம்பெண்.

"இஃது எனக்கு நன்றாய்த் தெரியும். மேற்கணவாய் மலைநாடுகளில் உள்ள அழகிய இளங் கன்னிப் பெண்கள் பலர் துருக்கி தேயத்துப் பெருஞ்செல்வர்களின் மகளிரில்லத்துக்குட் செல்ல விழைந்து தாமாகவே அடிமைவிற்கிறவர்களின் பின்னே கான்ஸ்தாந்திநோபிள் என்னும் நகரத்திற்குப் போவதைத் துயரமுடன் ஒப்புக்கொள்ளவேண்டியதே. இன்னுங் கொச்சி, குடகு, மலையநாடு, நாகநாடு முதலியவற்றி

லுள்ள தாய் தந்தைமாருந் தம்புதல்விகளுக்கு உயர்ந்தவிலை தேடிக்கொடுக்கும் விழைவால் அடிமை விற்பவர்களிடந் தாமே தம் உரிமைப்புதல்வியரைக் கொடுத்துவிடுவது பின்னும் மிக்க வருத்தத்தோடு சொல்ல வேண்டியதாயிருக்கின்றது.'' என்று குமுதவல்லி மொழிந்தாள்.

''அவை எல்லாம் அவ்வளவும் உண்மை, அம்மா! இன்னும் என்ன, அடிமை விற்கும் அவர்கள் அடிக்கடி மாதரைக் கொள்ளைகொண்டு போகுங் கொடியவர்கள். அவர்கள் நடவடிக்கைகளாற் பறிகொடுத்த குடும்பத்தில் துயரமுங் கேடும் உண்டாகின்றன. என் தலையெழுத்தும் இதுவே, அம்மா.'' என்று அம்மலையமாது மறுமொழி கூறினாள்.

இப்போது அவ்வேழைக் கைம்பெண்ணின் மனத்துயரத்தின் காரணம் இதுவென்று அறிந்தாளாய்க் குமுதவல்லி, ''ஓ, இது கூடுமானதா! உங்கள் அழகிய மரகதம் அங்ஙனங் கொண்டுபோகப்பட்டனளா?'' என்று கூவினாள்.

''அஃது அப்படித்தான், அம்மா.'' என்று மறுமொழி சொல்கையிலேயே தேம்பித்தேம்பி அழுதாள்; ''இரண்டு ஆண்டுகளுக்குமேல் ஒரு நாள் அடிமை விற்பவன் ஒருவன், ஏராளமான குதிரைச்சாரியுடன் வந்து, உணவு எடுப்பதற்காக இந்த மனையகத்தில் தங்கினான். அவன் தன்னிடத்தே ஏறக்குறைய ஆறு அழகிய இளம் பெண்கள் வைத்திருந்தான்—அவர்கள் எல்லாருங் காந்தாந்திநோபிள் நகரத்திற்குப் போவதைப்பற்றி மகிழ்ச்சி நிறைந்தவர்களாய் இருந்தார்கள். இன்னும் அவன், பார்வைக்குக் கொடுந்தோற்றம் உடையராய்ப் படைக்கலம்பூண்ட ஆறு பேர்களைக் கூட வைத்திருந்தான். என் மரகதத்தின்மேல் அத்தீயவன் கண்கள் பட்டநாள் பொல்லாதநாள்! இப் பெண் தன் பேரழகின் பொலிவால் துருக்கி சுலுத்தானுக்கு உகந்தவளாய் அவ்வரச நகரத்திலே தெரிந்தெடுக்கப்பட்டு,வரப்போகின்ற இரமசான் பண்டிகை முடிவிலே,அவருக்குக் காணிக்கையாக விடப்படுவதற்கு இடம் இருக்கின்றதென உறுதிமொழி சொல்லி, ஆகவே, அவளைத் தன்னொடுசேர்த்துவிடுவதற்கு நான் உடன்படவேண்டுமென்று முதன்முதல் அவன் எனக்கு எடுத்துச்சொல்லத்துணிந்தான். ஆனால், நான் அவன்சொல்லிய ஏற்பாட்டை இகழ்ந்து சினத்தோடுந் திகிலோடும் மறுதலித்துவிட்டேன். அம்மா, அப்போது தான் அவன் கைக்கூலியாலும் வேண்டுதலாலுந் தான் பெற்றுக்கொள்ளக் கூடாததை வலிவுசெய்து அடையலானான். என் கூலியாட்கள் தொலைவில் வயலிலே இருந்தார்கள்: நானே இங்கே என் மூன்று புதல்விமாரோடுங் காவல் அற்று இருந்தேன். அந்தத்தீயவன் என்னையும் என் இளைய புதல்விகள் இருவரையுங் காலுங் கையுங் கட்டிவிடும்படி தன் ஆட்களுக்குக் கட்டளையிட்டான்; நாங்கள் எவ்வளவோ தடுத்துங் கெஞ்சியும் அழுதும் அவர்கள் அப்படியே செய்துவிட்டார்கள். பிறகு, மரகதம்

அலங்கோலமாய்த், துன்பத்தால் மெய்ம்மறந்துபோக, அவளைக் கொண்டு போய் விட்டனர்! என்னையும் மிஞ்சின என் இரண்டு பெண்களையுங் கட்டவிழ்த்துவிட யாரும் இந்த மனையகத்திற்கு வரும்முன்னே அந்தக் குதிரைச்சாரி நெடுந்தொலைவு போயிருக்கவேண்டும்.''

குமுதவல்லி அப்பெண்பிள்ளையின் கையைப்பிடித்து அதனை உண்மையான இரக்கத்துடன் அழுத்திக்கொண்டு, "ஓ! இவையெல்லாங் கொடுமையாயிருக்கின்றன! இவ்வாறு உங்கள் மரகதத்தை இழந்துபோனீர்களோ?'' என்று சொன்னாள்.

அதற்கு வருத்தம் மிக்க அம்மாது, "எப்போதுமே இழந்துபோனேன். தானும் நாங்களும் உள்ளான இப்பொல்லாதகொள்ளையை அவளுக்கு மணமகனாக உறுதிசெய்யப்பட்டவன் தெரிந்தவுடனே, அவன் மனத்தை வருத்திய துன்பத்தை, ஓ! அம்மா, நீங்களே எண்ணிப்பாருங்கள்! என் மரகதத்தினிடத்திலே அவனுக்கு இருந்த உண்மையான அன்புக்கு ஓர் அடையாளம் உங்களுக்குச் சொல்லுகிறேன். அந்தக்குதிரைச் சாரியைப் பின்றொடர்தற்காக அவன் படைக்கலம்பூண்ட தோழர்கூட்டத்தொடு புறப்பட்டான்: ஆனால் அதைப்பற்றி அவன் ஒரு செய்தியும் பெறக்கூடவில்லை; அவன் காந்தாந்திநோபிள் நகரத்திற்கும் பயணம் புறப்பட்டுப் போனான். ஆனாற், பலவகைப்பட்ட இடுக்கண்களும் இடரானநிகழ்ச்சிகளும் அவனை வழியிலே தடங்கல் பண்ணின; ஆகையால் அவ்வரசநகரத்திற்கு மிகவுங் காலந் தாழ்த்துப்போனான். இரமசான் பண்டிகை முடிவு பெற்றது; வழக்கப்படி திருவிழாக்களுங், களியாட்டுகளும், வாணவேடிக்கைளுஞ், சிறந்த ஊர்கோலங்களும் அதனைப் பின்றொடர்ந்து நடந்தன. கடைசியாக ஆட்பலியும் நடந்தேறியது; முந்நூறு அழகியபெண்கள் நடுவிலே என்னுடைய மரகதம் சுலுத்தானுக்குக் காணிக்கையாகச் செலுத்தப்படும் நிகரற்ற அழகியமணியாய்ப் பொறுக்கி எடுக்கப்பட்டாள். அவ்வேழை இளம்பையன் நெஞ்சம் உடைந்தவனாய்க் காந்தாந்திநோபிளை விட்டுவந்தான்; உரியகாலத்தே தன் வீடுவந்து சேர்ந்தான். ஆனல், ஐயோ! முன்னிருந்ததற்கு அவன் வடிவம் எவ்வளவு வேறுபட்டுப்போனான்! அம்மா, நான் அவனை அடிக்கடி பார்க்கிறேன்: ஆனால், திரும்பிவந்தது முதல் அவன் வாயில் ஒரு புன்சிரிப்பாயினும் வர நான் பார்க்கவில்லை. தானே இயங்கும் ஆற்றல் வாய்த்த மெய்யான உயிர் ஏதும் இல்லாத ஒருபொறி தன் அமைப்பின் சூழ்ச்சியால் நடைபெறுதல் போல அவன் தன் அலுவல்மேற்போகிறான். என்மகள் சுலுத்தான் மனைவி யாகி யிருக்கலாம் என்பதில் தட்டில்லை: ஆனால், ஐயோ! இந்நேரம் அவள் மனம் முறிந்துபோகாவிட்டாலுங்கூட, வெளிமினுக்கான துயரநிலையிலேதான் அவள் இருக்கின்றாள் என்று எனக்குத் துணிவாய்த் தோன்றுகின்றது.'' என்று கூறினாள்.

"அவளிடமிருந்து உங்களுக்கு ஒருசெய்தியுங் வரவில்லையா?" என்று குமுதவல்லி வினவினள்.

'ஐயோ, இல்லையே!'' என்று அக் கைம்பெண் விடைபகர்ந்தாள். "ஒருதடவை ஒரு பெண்பிள்ளை காந்தாந்திநோபிளி லுள்ள அரசன் இல்லகத்துள் நுழைந்துவிட்டால், அவளுக்கும் வெளியேயுள்ள உலகத்திற்கும் நடுவிலே கடக்கமுடியாத ஒரு பெருந்தடை உண்டாய் விடுகின்றது. அவள் யார்க்குஞ் செய்தி விடுப்பதுங் கூடாது; மற்றவர்களிடமிருந்து ஒரு செய்தியும் பெற்றுக்கொள்வதுங்கூடாது. வேறிடங்களில் தான் விட்டுவந்த பெற்றோர், உறவினர், நண்பர்கள் முதலான எல்லாரையும் அவள் ஒழித்துவிடவேண்டும், ஆணையொடு மறுத்துவிட வேண்டும்; அவள் சைவசமயியாயிருந்தால் தான் கைக்கொண்ட சமயத்தையுங்கூட விட்டுவிடுதல் வேண்டும். சுருக்கமாய்ச்சொன்னால், அம்மா, அவள் இன்னுமொன்பதே தொலைந்துபோய் விட்டது; அவளிடத்திற் பற்றுதல் வைத்தவர்கள் அவளைப் பற்றி இனி ஒன்றுங் கேளாமலேபோகலாம். என் மரகதத்தின் தலையெழுத்தும் அப்படியேயாயிற்று. அம்மா, இப்போது, என்முகத்தின்மேல் அடையாளங்களாக அவ்வளவு ஆழ்ந்த கோடுகள் அவ்வருத்தத்தினால் எவ்வாறு உண்டாயின என்பதை நீங்கள் அறிந்து கொண்டீர்கள்.''

குமுதவல்லியும் அவள் பாங்கிமார் இருவரும் அம்மலைநாட்டு மாது சொல்லிய கதையிலே துயரமும் இரக்கமும் மிகுந்த ஒருபற்றுதல் கொள்ளப்பெற்றார்கள். அவளை ஆற்றுவித்தற்கு அவர்கள் ஒரு சொல்லாயினும் பேச முயலவில்லை. ஏனெனில், அங்கே ஆறுதலுக்கு இடம் ஒன்றும் இல்லை. திரும்ப நன்மையுண்டாமென்று அவர்கள் ஓர் எழுத்தாயினுஞ் சொல்லவில்லை: என்னையென்றால், மனவிருப்பே அவிந்துபோயிற்றென்றும் அவ்விடரினின்றும் அவளை இனித்திருப்பமுடியாதென்றும் அவர்கள் அறிந்துகொண்டார்கள்.

"இலட்சக்கணக்கான குடிமக்களுக்கு எல்லாம்வல்ல அரசனுயிருக்கும் வல்லமையுள்ள சுலுத்தான் அவர்கள் தாம் இன்பம் நுகர்தற்பொருட்டுத், தாழ்ந்தோராயினுந் தம்மோடொத்த மக்கள் சிலர்மேல் எவ்வளவு பெருந்துயரத்தைச் சுமத்திவிடுகின்றார் என்பதைத் தாஞ் சிறிதும் நினைக்கின்றார் இல்லையே! இன்னும், அம்மா, அவ்விளவரசன் தன் இன்பத்திற்காக மற்ற நாடுகளில் உள்ள குடும்பங்கள்—என்குடும்பம் ஆக்கப்பட்டதுபோல்!—பாழாக்கப்படுவது பின்னுந் துயரநிகழ்ச்சியாய் இருக்கின்றதே! இப்படியிருந்தும், அவர் அமைதியும் இரக்கமும் உள்ள நல்ல மன்னன் என்றும், அவர் அருளும் அன்பும் நிறைந்தவரென்றுந், தாம் அவற்றை நீக்கிவிட எண்ணமுள்ளவராய் இருந்தும் தங் குடிமக்களின் அன்பிற்குப் பழுதாகும் என்று அஞ்சிப் பழக்க வழக்கங்கள் பலவற்

றிற்கு இடந்தந்திருக்கிறார் என்றும் பேசிக்கொள்ளுகிறார்கள்.'' என்று அம்மாது தொடர்ந்து கூறினாள்.

''ஓ! அவ்வாறாயின் அவரது வல்லமையால் யாதுபயன்? எவ்வளவு நன்மைசெய்யக் கூடுமோ அவ்வளவுஞ் செய்திலராயின் தாஞ் செலுத்தும் அத்தனை வல்லமையும் என்னபயனுக்கு?'' என்று குமுதவல்லி அவ்வம்மைக்கு நேர்ந்த இடுக்கணை நினைந்து அருவருப்பு மிக்க குரலிற் பேசினாள்.

''அம்மா, பேசாதேயுங்கள்!'' என்று அவ்வம்மை மறுபடியுந் தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, ''என் புதல்விகள் திரும்பிவருகிறார்கள், காணாமற்போன அவர்களின் அக்காளைப்பற்றி நான் அவர்களிடம் பேசுவதே இல்லை.'' என்று சொன்னாள்.

அப்பெண்கள் அங்ஙனமே வந்தார்கள்; குமுதவல்லிக்கும் அவள் பாங்கிமார்க்கும் ஏற்படுத்தப்பட்ட அறைக்கு அவர்களை இப்போது அழைத்துச்சென்றார்கள். அங்கே நாகநாட்டரசியானவள் சிறிது முன்னே தான்கேட்ட துயரமான வரலாற்றைப்பற்றித் தனக்கு உறக்கம் வந்து கூடும்வரையில் தன் பாங்கிமாரோடு சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தாள்.

காலையில் அவர்கள் அறையை விட்டு வந்தபோது, அவ்வம்மையும் அவள் மகளிர் இருவருந் தாஞ் செய்தற்குரிய உதவிகளைக் கூடுமான வரையில் ஏற்கும் வகையாய்ச் செய்துகொண்டிருப்பதைப்பார்த்தார்கள்; பல திறப்பட்ட உணவுகளுங், காணியில் விளைந்தனவுங், கனிகளுங், குளிரப்பண்ணுங்குடிநீர்களுஞ் சாப்பாட்டுக்காகப் பலகைமேற் கொண்டு வந்து பரப்பப்பட்டன. குமுதவல்லி, அவ்வம்மையினிடத்துக், கூலிக்காரரிற் சிலரைப் படைக்கலந்தாங்கிய வழித்துணையாக் கூட்டிவிடுக்கும்படி கேட்க எண்ணினாள்; ஆனால், அக்கைம்பெண் தற்செயலாய்ப் பேசியதொன்றிலிருந்து அவர்கள் எல்லாருந் தமது விடுமுறை நாளைக் களியாட்டிற் கழிக்கத் தொலைவிலுள்ள ஓரிடத்திற்குப் போயிருக்கின்றார்கள் என்று அறிந்துகொண்டமையால், நீலகிரி நகரத்தைநோக்கிச் செல்லும்வழியிற் காணப்படுஞ் சிற்றூர்களிலாவது நகர்களிலாவது தக்க துணையொன்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்னுந் தீர்மானத்தினளவில் நாகநாட்டரசி தன்னை அமைதிசெய்துகொண்டாள்.

குமுதவல்லியும் அவள் பாங்கிமாருந் தாம் பெற்றுக்கொண்ட அன்பான உதவிக்காக நன்றிமொழிகளுங் கடமைகளுஞ் சொல்லிவிட்டு, அக்கைம்பெண்ணினிடத்தும் அவள் புதல்விமார் இருவரிடத்தும் விடைபெற்றுக்கொண்டார்கள். ஈரநெஞ்சத்தொடு செய்யப்பட்ட உதவிக்காகக் கைம்மாறு ஏதும் அம்மாது விரும்பாமலும் எதிர்பாராமலும் இருந்துங், குமுதவல்லி நேரம் பார்த்து, மறைவாய் இரண்டு பரிசுகளை அவ்விரு

பெண்களுக்குங் கொடுத்தாள். திருப்பவும் இப்போது நம் அழகிய தலைவி தன் அன்புள்ள பாங்கிமாரொடு பயணஞ்செல்ல நாங் காணுகின்றோம்.

ஏறக்குறையக் கட்டாயமாய்க் குறிக்கவேண்டிய இரண்டொரு செய்திகளைத் தெரிவிக்க வேண்டியிருந்தும், இது வரையில் நாம் சொல்லிக்கொண்டு வந்ததை அவற்றிற்காக நடுவே நிறுத்தவில்லை; ஆகையால், இப்போது இடம்பெற்றமையின் அதனைச் சொல்லிவிடுவோம். அப் பஞ்சாலைக்காரனது வீட்டண்டையிலிருந்து தான் கலவரமாய் ஓடிவந்த பிறகு, ஒழிவுகிடைத்தமையாற் குமுதவல்லி இப்போது தான் அச்சந் தரும் நல்லானைத்தவிரப் பிறன் அல்லன் எனத்தீர்மானமாக எண்ணிய அவ்விளம் பௌத்தனுடன் தான் சிறிதுநேரங் கொண்ட பழக்கத்தைப் பற்றி நினைந்தபொழுது, தான் சிறிதுநேரமேனும் பற்றுதல் வைத்த ஒருவன் அவ்வெண்ணத்திற்கு அங்ஙனம் எள்ளளவேனுந் தகுதியில்லாதவனாய்ப் போனதைப்பற்றி மிகுந்த வருத்தங் கொள்ளப்பெற்றாள். தத்தம் வகுப்புக்குரிய உடம்பின் பேரழகெல்லாம் முறையே ஒருங்கு திரண்டு உருவாகிய இருவர், அங்ஙனந் தமக்குள் ஏதோ அத்தன்மைத்தாகிய பற்றுதல் கொள்ளப்பெறாது ஒருங்கு கூட்டப்படுதல் கூடாததேயாம் என்பதனை முன்னரே கூறிப்போந்தாம். குமுதவல்லியின் அளவுகடந்த வனப்பினாலும், அமைதியினாலும், அறிவினாலும் நீலலோசனன் உள்ளத்தில் எழுந்த எண்ணமானது ஏற்கெனவே ஏதோ காதலொடு மிகவும் இணைப்பட்டதொன்றாய் இருந்தது; ஆனால் அக்கன்னிப்பெண்ணோ மும்முரமில்லாத எண்ணங்களும் விரையாத குணமும் உடையவளாய் இருந்ததனால் சிறிது பற்றுதலுணர்வுமட்டுங் கொள்ளப்பெற்றாள். தன் புத்தப் புதிய இளம்பருவ உணர்வுகளினிடையே, மக்கள் இயற்கையில் நம்பிக்கைகொள்ள விழைந்த ஒருத்திக்கு அந்த நம்பிக்கை, நீலலோசனனிடத்தில் ஏமாற்றம் உற்றதுபோல், அவ்வளவு கொடுமையாக அதிர்ச்சி பெறுமானால் அல்லது அழிக்கப்படுமானால் பின்னும் அது வருந்தத்தக்கதாகவேயிருக்கும். ஆகவே, அங்ஙனமானதுபற்றி அவள் புலம்பியது ஒரு வியப்பன்று. அஞ்சத்தக்க நல்லான் தன்னொடு வழிப்பயணம் வந்ததைப் பற்றி நினைக்கையில் உண்டான திகிலினும் வியப்பினும் வேறாக, அவள், அத்தனை இளைஞனாய்க் கவர்ச்சிமிக்க நோக்கம் வாய்ந்தவனாய் இனிய நடையுள்ளவனாய் உள்ள ஒருவன் திகிலையுங் கலவரத்தையுந் தருஞ் செய்கையுடையவன் ஆயதை நினைக்கும்போது தான் மனவெழுச்சி குன்றப் பெறுவது ஒருவியப்பன்று.

இனிக், குமுதவல்லியும் அவள் பாங்கிமாருந் தம் வழியே செல்வதைப்பற்றிக் கூறுவது விடுத்துச், சிறிதுநேரம் படிப்பவர் கருத்தை மற்றவகைகளுக்குத் திருப்புகின்றோம். இந்த அதிகாரத்தை முடிப்ப

தற்கு முன்னே முதலாக நீலலோசனனிடந் திருப்புவோம். குமுதவல்லி யைப் பிரிந்தபிறகு அவனையும் அவன் துணைவர் கேசரிவீரன் வியாக்கிர வீரனையுந் துப்புக் கெட்ட அச்சாவடியிலே விட்டு வந்தோம். அப்பௌத் தர் மூவருந் தங் குதிரைகளைப் பணையத்துக்குள் விட்டபிறகு, அத்தனை எளிமையான அவ்விடத்திற் கிடைக்கக்கூடிய உணவை உண்பதற்கு உட்கார்ந்தார்கள். என்றாலும், நீலலோசனன் சிறிதே உண்டான்; அஃது அளவான அவ்வுணவு தனக்குச் சுவைப்படாமையால் அன்று; என்னெனிற் செழுமையான அல்லது சுவைமிக்க உணவிலே அவன் அவா உடையவன் அல்லன்; ஆனால், அஃது அவன் உள்ளத்திற் குமுதவல்லி யின் அழகிய வடிவம் நிறைந்திருந்ததனாலேயாம். மயங்கப்படுத்தும் அத் துணை அரிய அழகினை இதற்குமுன் அவன் கண்கள் எங்கும் பார்த்ததே இல்லை; தன் காதினுள் மெல்லெனப்புகுந்த அல்லது தன் நெஞ்சத்தினுள் முழுதும் ஆழ இன்னிசை பொழிந்த அவ்வளவு ஒலியினிய குரலினை அவன் இதற்கு முன் கேட்டதே யில்லை. அந்நாளில் தமக்குமுன் எதிர்ப் பட்ட இனிய கூட்டுறவைப்பற்றிக் கேசரிவீரனும் வியாக்கிரவீரனும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்; முந்தினவனான கேசரி வீரன் குமுத வல்லியின் வனப்பினால் தன் இளந்தலைவன் நெஞ்சங் கலவரப்பட்டது குறித்துச் சிறிதுந் துயரம் அடையாமலே இருந்தான்.

ஆனால், திடீரென்று அம்மூவரும் உட்கார்ந்திருந்த அறையின் கதவு—அச்சாவடியின் இடத்தின் அளவு நெருக்கமாய் இருந்தமையால் தலைவனும் அவன் ஆட்களும் வேறு வேறு இருத்தற்குத் தனித்தனி அறைகள் வகுக்கப்படவில்லை—திறக்கப்பட்டது; அப்பஞ்சாலைத் தலை வன் உள்ளே வந்தான்.

"ஐயா, இளைஞரே, நல்ல பெண்கள்கூட்டத்தை என்னுடைய விருந் தோம்பலுக்குக் கள்ளமாய்ச்செலுத்தினீர்! நான் அடைந்த மானக்கேட் டிற்காக இவ்வூரிலுள்ள ஆறு நல்ல தடியர்களை ஒன்றுசேர்த்து, உம்மை யும் உமக்குத் துணைவந்த இக்கள்வர்களையும் நன்றாய்ப் பழுக்கப்புடைத் தேனானால் என் மனம் ஆறும்! நீங்கள் நல்லொழுக்கம் உள்ளவர்கள் அல்லரென எனக்கு எண்ணந்தோன்றுகின்றது; இல்லாவிட்டால் அந்த மாதும் அவள் பாங்கிமாரும் அங்ஙனம் நடந்திருக்கமாட்டார்களே." என்று அவன் உரத்துக் கத்தினான்.

"இறுமாப்புமிக்க முதியோனே! என்ன பேசுகின்றாய்?" என்று நீலலோசனன் துள்ளி எழுந்தான்.

அதற்குப் பஞ்சாலைக்காரன் கடுகடுப்பான பார்வையோடுங் குரலோ டும், "என்ன பேசுகிறேனா? அந்தப்பெண்ணும் அவள் தோழிகளும் உங் களையொத்த பௌத்தர்களின் வழித்துணை ஆகாதெனக் கருதித் தாம்

பிரிந்து போகவேண்டிய தக்கநேரத்தை நாடியதற்கு ஏதோ நல்லகாரணம் இருந்ததாகல்வேண்டும்.'' என்று மறுமொழி புகன்றான்.

''பிரிந்தாபோயினார்கள்?'' என்று நீலலோசனன் திடுமெனக் கூவி, ''உன்னுடைய சொற்கள் எதனைக் குறிக்கின்றன?'' என வினவினான்.

''அவர்கள் பறந்தோடிப்போனார்கள்.'' என்று விடை பகர்ந்தான் பஞ்சாலைக்காரன்; ''வீட்டண்டை போனதும்—''

''ஓடியா போனார்கள்?'' என்று நீலலோசனன் மறுபடியுங் கூவினான்; அங்ஙனமே வியாக்கிர வீரனுங் கூவினான்; அப்போது கேசரி வீரன் பேசாதிருந்தாலுந் தன்பார்வையில் தானுற்ற வியப்பினைப் புலப்படுத்தினான்.

'' ஆம், ஓடித்தான்போனார்கள் '' என்று திரும்பவும் பஞ்சாலைக்காரன் மறுமொழி புகன்றான்; ''அங்ஙனம் அவர்கள் செய்ததற்குத் தக்க காரணம் இருக்கவேண்டுமென்பதில் ஐயமில்லை.''

அப்பௌத்த இளைஞன் மிகவுங் கலவரம் அடைந்தவனாய் 'ஓ புத்தரே, சாரணர்களே!'' என்று ஓலமிட்டான்; ''உம்முடைய வெடுவெடுப்பான குணமும் அன்பற்ற செய்கையுமே, அந்நங்கையும் அவள் பாங்கிமாரும் அவ்வுதவியை வேறிடத்திற் றேடிப் பெறும்படி அவர்களைத் துரத்திவிட்டன ; ஐயமின்றி நீர்தாம் அவ்வுதவிக்கு விலை ஏற்படுத்தி வாணிகம் பண்ணினீரே!''

''உமது விருப்பப்படி புத்தரையாவது அவர் சாரணரையாவது ஆணையிட்டுக் கூப்பிட்டுக்கொள்ளும்; நானோ சைவசமயத்திற்குரிய அடியார்கள் எல்லாரும் அறிய ஆணையிட்டு நீர் பொய் பேசுகிறீர் என்று சொல்லுகின்றேன்! அந்தப்பெண்ணையும் அவள் பாங்கிமாரையும் நான் என் வீட்டுக்கு எவ்வளவோ அன்புடன் அழைத்துப்போனேன்; போய் வீட்டுக்கதவைத்திறக்க யான் திரும்பவே, அவர்கள் வில்லினின்று அம்புகள் புறப்பட்டாற்போல் விரைந்து ஓடிப்போனார்கள். ''பறந்து ஓடுங்கள் உங்கள் உயிர் தப்ப?'' என்னுஞ் சொற்கள் அப்பெண்ணின் வாயினின்றும் ஒலித்தன! அவர்கள் ஓடியேபோனார்கள்! குளம்பின் ஓசையாலல்லாமல் அவர்களுடைய குதிரைகள் தம் அடிகள் நிலத்தே பாவாதனபோலவே தோன்ற அத்தனை விசையாய்ச் சென்றன.'' என்று பஞ்சாலைக்காரன் திரும்பவும் பேசினான்.

அவ்வாடவன் வெடுவெடுப்புள்ளவனாய் இருந்தாலும், அவனது உயர்ந்த பெருந்தன்மையைப் பார்க்குமிடத்து, அவன் இக்கதையைச் சொல்லிய வகையில் ஏதோ பிசகாத உண்மை ஒன்று உண்டென்பது புலப்பட்டது. அது வல்லாமலும், நன்கொடை கிடைக்குமென்று உறுதிமொழி சொன்னவுடனே அவன் தான் உதவி செய்வதிற் போதுமான பெருமகிழ்ச்சி காட்டினதை நீலலோசனன் நினைவு கூர்ந்தான். இப்

பொழுதோ குமுதவல்லியும் அவள் பாங்கிமாரும் ஓடிப்போனமையால் அவன் தான் எதிர்பார்த்ததை இழந்துபோனான். ஆகவே அப்பௌத்த இளைஞன் அவன் சொல்லிய கதையில் ஐயுறவு கொள்ளக் கூடவில்லை; அல்லது அக்கதை வேறுபடுத்தியாவது பிசகாகவாவது சொல்லப்பட்டதென்று அவன் எண்ணக்கூடவுமில்லை. அவன் பஞ்சாலைக்காரனிடங் கடுமையாய்ப் பேசிய தனது நடையை மாற்றி, அவனை அழைத்து மேசையின் அருகே இருத்தி நடந்தவற்றைப்பற்றி நுணுக்கமாய்க்கேட்டான்; அப் பஞ்சாலைத் தலைவன் அக்கதையைத் திரும்பவும் அப்படியே மொழிந்தான்; அவன் பின்னுஞ் சேர்த்துக்கூறவேண்டுவதொன்றும் இல்லை. குமுதவல்லியும் அவள் தோழிமாரும் போய்விட்டார்கள் என்பது தெளிவாகப் புலப்பட்டது; அவர்கள் அடைந்த பேர் அச்சத்திற்குக் காரணம் யாதென்று அவர்கள் ஒருங்கு கூடி ஆழநினைத்துஞ் சிறிதேனும் உய்த்தறிய வலியற்றவர்களானார்கள்.

மறுநாட் காலையில் அவ்வழகிய நங்கையொடு கூடி மறுபடியும் பயணந் துவங்கக் குறித்த நீலலோசனன் எண்ணம் பாழ்பட்டது. தனது உயிரின் இன்பத்திற்கு இன்றியமையாததான ஏதோ ஒன்றைத் தான் இழந்துவிட்டது போலவும், இதற்குமுன் எங்குந் துலக்கமாய் நகைகொண்டு விளங்கிய ஒரு தோற்றத்தின்மேற் கரிய முகிலானது தனது நிழலை வீசி மறைத்தது போலவும் அவன் எண்ணினான்; அன்றிரவு அப்பௌத்த இளைஞன் துயர்மிகுந்த உள்ளத்தொடு படுக்கைக்குச்சென்றான்.

## ஒன்பதாம் அதிகாரம்.

### கொள்ளைக்காரன் மனைவி

இப்போது நாம் நல்லானிடந் திரும்புதல்வேண்டும். ஏனெனில், அப்போது நேர்ந்த அச்செயலின் நிலைமைகளால் நாகநாட்டரசி அவ்வளவு வருந்துதற் கிடமான பிழையெண்ணங் கொள்ளப்பெற்றது இயற்கையே என்றாலும், இதனைப்பயில்வோர், உயர்ந்த ஒழுக்கமும் நற்குணமும் வாய்ந்த நீலலோசனனை அக்கொடிய கொள்ளைக்காரனோடு ஒன்றுபடுத்திய குமுதவல்லியின் பிழையிற், சிறிதும் உடன்படமாட்டார்களாதலால் என்க.

குமுதவல்லியினின்று அவள் மோதிரத்தைக் கவர்ந்துகொண்டமையால் தன்கருத்து இனிது நிறைவேறியபின் எவ்வாறு நல்லான் அச்சாவடியைவிட்டுச் சடுதியிற்போயினான் என்பதைச் சாவடிக்காரன் வாய்மொழியால் நாம் அறிந்துகொண்டாம். இருளனையும் மாதவனையுந் தான் விட்டு வந்ததும், நீலலோசனனையும் அவன் துணைவரையுந் தவறாமற்

சிறைப்படுத்தும்பொருட்டுக் கோபுரத்திற்குத் தான்விடுத்த தன்கூட்டத்தார் கையில் அவர்கள் சிறைப்பட்ட செய்தியைத் தெரிந்துகொள்ளுதற்கு இப்போது அவன் எதிர்பார்த்ததுஞ், சில கல் தொலைவுள்ளதும் ஆன ஓர் இடத்திற்கு அவன் விரைந்து குதிரை ஊர்ந்து திரும்பிவந்தான். மாதவனது உடையிற் றான் கொண்ட கோலத்தோடு சிறிதுநேரம் இல்லாதிருந்து, பிறகு தான் இப்போது திரும்பிவரும் இவ்விடத்திற் பௌத்தரைச் சிறைகொண்டு தன் கூட்டத்தார் வந்திருப்பர் என்றும் அவன் எதிர்பார்த்தான்.

இவ்விடத்திற்கு வந்ததும் நல்லான் அங்குள்ள தோப்பிற்குள் நுழைந்தான்; அவன் அங்குநின்று போனதும் அங்கே இயற்றப்பட்ட கூடாரத்தின் உள்ளேயிருந்து ஒருவிளக்கு ஒளிர்வதைக் கண்டான். உடனே, புல்லின்மேற் படுத்துக்கொண்டிருந்த இருளனும் மாதவனும் விரைந்தெழுந்து இவனிடம் வந்து சேர்ந்தார்கள்; கள்வர்தலைவன் உள்ளக் கொதிப்புடன் "என்னசெய்தி?" என்று கேட்டான்.

அதற்கு இருளன் துயரத்தோடும், "பொல்லாத செய்தி சொல்ல வேண்டியிருப்பதற்காக வருந்துகின்றேன்." என்று விடைபகர்ந்தான்.

"கேடுகாலமே!" என்று சினம் நிறைந்த குரலொடு, "நான் கொண்ட பொல்லாத ஐயுறவின்படியே ஆயிற்று! நல்லது ஈது என்ன செய்தி? நம்முடைய ஆட்கள் எங்கே? அவர்கள் திரும்பி வந்தார்களா? மீனம்பாள் எப்படியானாள்?" என நல்லான் உரத்திக்கூவினான்.

"மீனம்பாள் பெருமாட்டி பாதுகாப்புடனேதான் இருக்கிறார்கள்." என்று இருளன் ஏதோ சொல்வதற்கு நல்லசெய்தி வாய்த்தது பற்றி மகிழ்ந்து விடை கூறினான்; "அவ்வம்மை அதோ அந்தக் கூடாரத்தில் இருக்கிறார்கள். பௌத்தர்களைப் பற்றியோவென்றால், அவர்கள் மறுபடியும் நம்மைத் தப்பிப்போய் விட்டார்கள்."

"மறுபடியும் தப்பியா போய்விட்டார்கள்?" என்று நல்லான் இரைந்தான்; "முனிவர்கள் எல்லாரும் அறிய, நாம் எடுத்தமுயற்சிகளில் நாம் உணர்வுகெட்ட முழுமடையர்களாய் விட்டோம் என்று தெரிகிறது! குறைந்தமட்டில் நான் மட்டும் இல்லை; ஏனென்றால், நான் ஒருவனே முயற்சியில் வெற்றி அடைந்துவருகின்றேன்!"

"ஆ! சிறந்ததலைவனே தாங்கள் வெற்றி பெற்று வந்தீர்களா?" என்றான் இருளன்; "ஏதோ அவ்வளவேனும் நல்லதுதான்!"

"ஆம், ஏதோ நல்லதுதான்," என்று நல்லான் விரைந்து விடை கூறினான்; "ஆனாலும், அஃது ஆகவேண்டியதிற் பாதியே தான். நம்முடைய ஆட்கள் எங்கே இருக்கிறார்கள்? இன்னுஞ்சிறிது நேரத்தில் குமுதவல்லியையும் அவள் பாங்கிமாரையும் வழிமறித்துப் பிடிக்கிறதற்காக அவர்கள் வேண்டப்படுவார்கள்."

இந்த நேரத்திற் கூடாரத்தின் திரையானது அப்புறம் இழுக்கப் பட்டது; மீனும்பாள் வெளியே வந்தாள்.

"என் மேன்மை மிக்க கணவனே!" என்று கூவிக்கொண்டு ஓடி நல்லானுடைய மார்பின்மேற் போய்விழுந்தாள்.

"என் அழகிய மீனும்பாள்! காதலின் மிக்க என் மனைவி!" என்று அத்தலைவன் கூவித், தான்காதலிக்கும் அவ்வழகிற் சிறந்த மங்கையைத் தன்மார்புற அணைத்துக்கொண்டான். இவ்விருவரும் பலகிழமைகளாகப் பிரிந்திருந்தமையால், இப்போது கூடிய கூட்டத்தில் உண்டான பெருங்களிப்பின்கண் ஆழ்ந்தவனாய் அவன் சிலநேரந் தன் சூழல்களை யுஞ் சூழ்ச்சிகளையும் மறந்திருந்தான்.

முதலிற் கிளைத்த அவ்வுணர்வின் கொந்தளிப்புத் தணிந்தவுடனே, மீனும்பாள், "இருளன் மேற் குற்றஞ் சொல்லாதீர். நான் என்னாற் கூடியமட்டுஞ் செய்ததுபோலவே, அவனுந் தன்னாற் கூடிய அளவுஞ் செய்தான்; ஆயினும், அவ்விளம் பௌத்தனின் துணைவர்கள் ஏதோ ஐயப்பட்டார்கள்; அதனால் எல்லாம் பிசகிப்போயின." என்று மொழிந் தாள்.

நல்லான் தன் தோளின்மேற் சாய்ந்துகொண் டிருக்கும் அழகிற் சிறந்த தன் மனையாளோடுங் கூடாரத்துக்குட் போயினான்; அவர்கள் இரட்டுத்துணி மேல்மறைப்பின் கீழ் உட்கார்ந்தார்கள்; காப்பிரிப்பெண் ணும் மலைநாட்டுப் பணிப்பெண்ணுஞ் சிறிது தொலைவில் ஊன்றப்பட் டிருந்த வேறொரு கூடாரத்தில் இருந்தார்கள். அதனால் நல்லானும் மீனும்பாளும் ஒருங்கு தனியே யிருக்க இடம் பெற்றனர்.

"இப்போது நடந்தவற்றை யெல்லாஞ் சொல் என் மீனும்பாள்." என்றான் கள்வர் தலைவன்.

அங்ஙனமே அவள் நீலலோசனனிடத்தும் அவன் துணைவர்களிடத் துந் தான் செய்த துணிகரச் செயல்களை விரித்துரைப்பாளானாள்; அங் ஙனஞ் சொல்லுமிடத்துத், தான் அவ்விளம் பௌத்தனிடத்து அளவுக்கு மிஞ்சிக் காட்டிய காதலினிமைகள் அவ்வளவும் மெதுவே சொல்லாது விட்டு நெகிழ்ந்து போயினாள். பிறகு அவள் தான் வியாக்கிரவீரன் கை யால் அடைந்த கடுஞ்செயல்களைச் சொல்லவந்தபோது, அவன் தன்னைக் காலுங்கையுஞ் சேர்த்துக்கட்டிச் சாய்வணையோடு எங்ஙனம் பிணித்து முடிந்தான் என்பதை எடுத்துக்கூறினாள்; இதனைக் கேட்டதும், நல் லான் "ஒரு பௌத்தனுடைய நாய்" என்று தான் பெயரிட்ட நீலலோ சனன்றன் இளைய துணைவன்மேல் அச்சுறுத்துங் கொடுஞ் சொற்களை யும் பழிவாங்கும் ஆணைமொழிகளையும் உரத்துக்கூவினான். நல்லான் விரைந்துபோக்கின ஆட்கள் கோபுரத்திற்கு வந்த பிறகு அல்லாமல் தான் கட்டவிழ்த்து விடப்படவில்லை என்று மீனும்பாள் கூறலானாள்.

வனெனிற், பின்னே தெரிந்தபடி வீட்டுக்குரியவனும் அவ்வாறே காலுங் கையுங் கட்டப்பட்டுக் கிடந்தான்; குதிரைக்காரனும் பணையத்தில் உள்ள தன் அறையிற் கட்டப்பட்டு இருந்தான். அந்தப் பௌத்தர்கள் புறப் பட்டுப் போம்பொழுது கோபுரத்தின் பெரிய வாயிற்கதவு அவர்களால் திறந்துவிடப் பட்டிருந்தது. நீலலோசனனையும் அவன் துணைவரையும் பிடிக்கவேண்டுவது மிகவும் முதன்மையானதென்று கருதி, அவர்களை நாடெங்குந் தேடிப்பார்க்கும் பொருட்டு அக்கொள்ளைக் கூட்டத்தாரைத் தான் போக்கியிருப்பதாகவுந், தாங் தேடிப்போகும் பொருள் அகப்பட் டால் அல்லாமல்—அன்றி அவர்களைக் கண்டுபிடிக்கும் எண்ணம் முழு தும் பாழ்பட்டாலல்லாமல், அவர்கள் திரும்பித் தந் தலைவனிடம் வரலா காது எனவுந் தான் அறிவுறுத்தி யிருப்பதாக மீனும்பாள் பின்னும் மொழிந்தாள். குதிரைமேற் சென்ற அவ்வாட்கள் நெடுநேரமாய் வராத தற்குக் காரணம் இதுதான். அவர்கள் தன்னை விடுதலைசெய்ய வரும் வரையில், தான் இரண்டரை நாழிகைக்குமேற் சாய்வணையொடு சேர்த் துக் காலுங்கையும் இறுகக் கட்டப்பட்டிருந்தமையால், தான் மிகவுங் களைத்து நோயாய்ப்போகவே, திரும்பவுந் தன்கணவனிடம் வந்துசேரப் பயணம்புறப்படும்முன், அந்நாளின் பிற்பகலில் தான் நெடுநேரங் காலந் தாழ்க்கலாயிற் றெனவும் மீனும்பாள் கூறிமுடித்தாள்.

அந்தப் பௌத்தர்களுக்கு மாறாய் எடுத்த துணிவுச் செயல் தவறி யதைப்பற்றி நல்லான் மிகவும் மனம் அலைக்கழிந்தான்; என்றாலும், தன் ஆட்கள் அவர்களைத் தொடர்ந்து பற்றிக்கொள்வார்கள் என்னும் ஒரு சிறு நம்பிக்கை இன்னும் அவன் கொண்டிருந்தான்.

"காதலிற் சிறந்த மீனும்பாள், யான் துவங்கியிருக்கும் இச்சூழ்ச்சி யின் வகை முழுதும் யான் விடுத்த திருமுகத்தால் நீ தெரிந்திருக்கலாம்? அதில் நீ செய்யவேண்டுஞ் செயலும் நீ அறிந்திருக்கலாம்? இதன் பொருட்டாகவே, நீ பார்க்கச்சென்ற உன் உறவினர் வீட்டிலிருந்து உன்னை அவ்வளவு திடீரென்று வரவழைக்கலானேன்." என்று அவன் தன் மனைவியை நோக்கிச் சொன்னான்.

"மேன்மை தங்கிய பெருமானே, யான் எல்லாவகைகளையுந் தெரிந்து கொண்டேன்." என்று மீனும்பாள் தன் கணவனின் அழகிய முகத்தை அன்போடும் வியப்போடும் நோக்கினவளாய் விடை பகர்ந் தாள்; "ஆனால், குமுதவல்லியைப் பற்றியோ—"

"இதோ அவளது மோதிரம்!" என்று தன் வடிவத்தின்மேல் வெற்றிக்குறிப்புக் கிளர்ந்துதோன்ற நல்லான் மறுமொழி புகன்றான்; "நான் மட்டும் மேற்கொள்ளும் எந்தச்செயலிலும் நான் வெற்றி பெறு கின்றேன்!"

அதன் பிறகு, அவன் தான் இன்னும் அணிந்திருக்கும் அக்கோலத்துடன், அச்சாவடியிற் செய்த செய்கைகளை மீனம்பாளுக்கு விளக்கமாய் எடுத்து உரைத்தான்; அவன் அவற்றைச் சொல்லி முடித்தவுடனே, அவன் மனையாள் "ஓ! என் அன்புள்ள காதலனே, ஒருவர் அறிந்தாலும் உயிர்க்கு இறுதியாய் முடியும் ஒருநகரத்தின் நடுவிலே நீர் புகுந்தது எவ்வளவு முரட்டுத்தனம்!" என்று கூவினாள்.

"நீ என்னிடத்தில் வைத்திருக்கும் பற்றுதலின் மிகுதியைக் காட்டுதலால் இச்சொற்கள் என் காதிற்கு இனிமை தந்தாலும், என் காதலி, இத்தகைய அச்சத்திற்கு நீ இடங்கொடாதே." என்று அவன் மறுமொழி கூறினான்; "இப்போது நான் அவ்வளவு நன்றாய் வெற்றி பெற்றுவந்த துணிவான செய்கையை நான் துணிந்து செய்யவேண்டுவது எனக்குக் கட்டாயமாய் இருந்தது. என்றாலும், மீனம்பாள், நான் மிகவும் விழிப்பாய் இருந்தேன்! குமுதவல்லியிருந்த அறையிற் கட்டாயமாக இருக்கவேண்டியதற்கு மேல் ஒரு நொடிப்பொழுதுதானும் நான் தங்கவில்லை; அவள் அணிந்திருந்த மற்ற மணிகளை அகப்படுத்திக் கொள்ளவுங்கூட நான் தங்கவில்லை; அணிகல மேசைமேல் ஏராளமாய்ப் பரப்பி வைக்கப்பட்ட அணிகலங்களைக்கூட எடுக்க நான் தங்கவில்லை. அதுவேயுமன்றி, இராக்காலத்திற் காவல் அற்று உறங்கும் பெண்கள் உள்ள அறைக்குள் நுழைந்தபோது, பதுங்கிச் செல்லும் இழிந்த திருடன் போல் யான் நடக்கவேண்டி வந்ததைப்பற்றி என்னையே யான் இகழ்ந்து கொள்ளவேண்டியவனானேன் என்பதை வெளிவிட்டுச் சொல்லுகின்றேன். நிறந்தபாட்டையிற் செவ்வையாகப் படைக்கலம் பூண்டு செல்லும் வழிப்போக்கர்களை மிகவுந் துணிகரமாய் எதிர்த்து வென்று கொள்ளை கொள்ளுஞ் செய்கைக்கும் இதற்கும் எவ்வளவு வேற்றுமை!"

'ஆம், ஆம், என் பெருமானே, உங்கள் தொழிலினுங்கூட ஆண்மையும் மறமும் இருக்கவேண்டியனவே!" என்று வியந்துகூறினாள் மீனம்பாள்.

இங்ஙனம் இவ்விருவருந் தத்தம் நெறிதப்பிய நடவடிக்கைகளோடு ஒன்றுபட்ட எண்ணங்களை எல்லாம் உயர்த்திக் கொள்ளுதற் பொருட்டுந், தாந் தலையிட்ட தொழில்களுக்கு ஆண்மை என்னும் மேல் மினுக்குப் பூசுதற் பொருட்டும் மிகவருந்தி முயன்றார்கள். அது, தமது தாழ்வினை மறைக்க முயன்ற பொய்ப்பெருமையோ அன்று; தம்மைத்தாமே அமைதிப்படுத்திக் கொள்ள முயன்ற மனச்சான்றின் ஐயுறவோ அதுவும் அன்று; அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கும்போது அவர்கள் கண்களானவை அவர்தந் தீயசெய்கைகளின் கருத்தைத் தாம் உணர்ந்தமை புலப்படுத்துமாயின் அவர்கள் தம்முட் பாராட்டிய மிக்க அன்பு பழுது படுமெனவும், அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் வைத்த நன்குமதிப்

'வீரம்' என்னுஞ் சொல் வடமொழியாகலின், அதற்கு நேரான 'மறம்' என்னுந் தமிழ்மொழியை நாம் வழங்கல்வேண்டும்.

சிவஞானபோதம் என்னும் உண்மையறிவுநூல் முதன் முதல் ஆசிரியர் மெய்கண்ட தேவநாயனாரால் தமிழ்மொழியிற் செய்யப்பட்டதாகும். இது வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துச் செய்யப்பட்டதன்று. மெய்கண்டதேவர் இந்நூலை இயற்றுதற்குமுன், வடமொழியில் இப்பெயர்கொண்ட நூல் ஒன்று இருந்ததென்பதற்கு எதொரு சான்றுங் காணப்படவில்லை. மெய்கண்டதேவர் 'இந்நூலை வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துச் செய்கின்றேன்' என்று யாண்டும் ஓதிற்றிலர். இந்நூலுக்குப் பாயிரம் உரைத்தாரும் அவ்வாறு கூறிற்றிலர். மெய்கண்டதேவர்தம் மாணாக்கரான அருணந்தியாரும், அவர்தம் மாணாக்கர் வழிவந்த உமாபதியாரும் அவ்வாறு கூறிற்றிலர். இப்போது வடமொழியிற் காணப்படுஞ் சிவஞானபோதநூல், மெய்கண்டதேவர் அருளிச்செய்த தமிழ்ச் சிவஞானபோதத்தை மொழிபெயர்த்துச் செய்ததென்பது, அதன் ௧௨-ஆஞ் சூத்திரக் கடைசியிற் காணப்படுங் குறிப்பினாற் றெற்றெனவிளங்காநிற்கின்றது.

சிவஞானபோதத்தைவிடச் சொற்சுருக்கமும் அரும்பெரும் பொருட்பெருக்கமும் வாய்ந்த பிறிதொருநூல் வேறெந்த மொழியிலும் இல்லை. வடமொழியில் அரும்பெரும் பொருள் ஆராயும் உபநிடதம், சாங்கியம், யோகம், நையாயிகம், வைசேடிகம், வேதாந்தம் முதலான நூல்களுங்கூடச் சிவஞானபோதத்திற்கு ஈடாகமாட்டா. இவை சிவஞானபோதத்தைவிடச் சொல்லால் விரிந்திருக்கின்றன; ஆனாற், சிவஞானபோதத்திலுள்ள அத்துணைப் பெரும் பொருள் உடைய அல்ல.

இன்னும், வடமொழியிற் பாராட்டப்படும் உபநிடதங்களுஞ் சாங்கியம் முதலான நூல்களுந் தமிழ்ச்சான்றோர்களால் வடமொழியில் இயற்றி வைக்கப்பட்டனவாகும். இருக்குவேதத்தில் ஆரியராற் பாடப்பட்டனவாகக் காணப்படும் பதிகப்பொருள்களை உற்றுநோக்குங்கால், ஆரியர் முழுமுதற்கடவுளைப் பற்றியும் உயிர்களைப்பற்றியும் உயிர்களைப்பிணித்த மும்மலங்களைப்பற்றியும் உயிர்கள் மும்மலப்பற்று நீங்கி இறைவன் திருவருளின்பத்திற் றோய்ந்திருத்தற்குரிய வழிவகைகளைப்பற்றியுஞ் சிறிதாயினும் ஆராய்ந்து பார்க்கத் தெரிந்தவர்கள் அல்லர் என்பது நன்கு புலனாகாநிற்கின்றது. ஆகவே, இம்முப்பொருளாராய்ச்சி இல்லாமல், வீணே சிறுதெய்வ வெறியாட்டயர்ந்து கொலைபுலையிலுங் கட்குடியிலுஞ் சூதிலுந் தமது காலத்தை வீணே கழித்துத் தமது பிறவிப்பயனை இழக்கும் ஆரியரைக் கண்டு அவர்மேல் இரக்கமுற்ற தமிழ்ச்சான்றோர்களே அவரது ஆரியமொழியில் அவரைத் தெருட்டுதற்பொருட்டு உபநிடதங்களுஞ் சாங்கியம் முதலான அறிவுநூல்களும், இருக்குவேத எசர்வேதங்களிற் சிவபெருமான் மேலனவான சில பல பதிகங்களும் இயற்றி வைப்பாராயினர். இந்நூல்களும் பதிகங்களும் ஆரியமொழியில் இருத்தல் கண்டு அவை ஆரியராற் செய்யப்பட்டனவென்று கருதி விடுதல் பிழையாகும். இந்நாளிற் றமிழ்மக்களிற் பலர் ஆங்கில மொழியைத் திறமாகப் பயின்று, தமிழ் மொழி யியல்புகளையுந் தமிழர்தம் நாகரிக வரலாறுகளையுஞ் சைவசித்தாந்தக் கோட்பாடுகளையும் ஆங்கிலத்தில் நூல்களாகவுங் கட்டுரைகளாகவும் வரைந்துவைத்தல்போலவே, அந்நாளிருந்த தமிழ் ஆசிரியர்களும் ஆரியர்க்கு அறிவுகொளுத்தும் பொருட்டு ஆரியமொழியில் அந்நூல்களை இயற்றிவைத்தாரென்று அறிந்து கொள்ளல் வேண்டும். உபநிடதம்முதலான மேற்காட்டிய வடமொழிநூல்கள் தமிழ்ச் சான்றோர்களால் இயற்றப்பட்டவை யென்பதற்கு அந்நூல்களிலேயே தக்கசான்றுகள் இருக்கின்றன. இவ்வரலாறுகளெல்லாம் எம்முடைய மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும், 'வேளாளர் நாகரிகம், பண்டைத் தமிழர் ஆரியர், சாதிவேற்றுமை, பழந்தமிழ்க் கொள்கை முதலான நூல்களில் விரிவாக எடுத்து விளக்கப்பட்டிருக்கின்றன.

இனிச், சிவஞானபோதத்திற்கு அடுத்தபடியில் மிகச் சிறந்த தனித் நூலாய்த் திகழ்வது, தெய்வத் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளே.

உருவத்தாற் சிறிய செய்யுட்களையுடைய இவ்விழுமிய நூலில் மக்களின் இம்மைமறுமை வாழ்க்கைக் குரிய எல்லாப்பொருள்களும் அடக்கி வைத்து அறிவுறுத்தப்படுகின்றன. இதனையொத்ததோர் அருமந்த நூலை வேறெந்த மொழியிலுங் காண்டல் இயலாது. இதன் அரும் பெருஞ் சிறப்பைப் பழைய தமிழ்க்கழகப் புலவர்கள் ஒவ்வொருவரும் எடுத்துப் பாடி யிருக்கின்றனர். அவற்றுள்,

"தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்-மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாடா வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி"

"ஆயிரத்து முந்நூற்று முப்பத் தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்-போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்" என்னும் இரண்டு செய்யுட்களே இப்போது திருக்குறட்சிறப்பை அறிவித்தற்குப் போதும்.

மேலும், வடமொழி இறந்துபோன தொன்றாகையால், அதன்கண்உள்ள நூல்களை எவரும் எளிதில் அறிந்துகொள்ளல் இயலாது. தமிழ்மொழியோ பண்டைக்காலந்தொட்டு இன்றுகாறும் பலகோடி மக்களாற் பேசப்பட்டுவரும் உயிருடைமொழியா யிருத்தலால், இதன்கண் உள்ள திருக்குறள் முதலான நூற்செய்யுட்களை எடுத்துச்சொன்னாற், கல்வியில்லாதவர்களுஞ் சிறிதேறக் குறைய அவற்றின் சொற்பொருள்களை அறிந்துகொள்ளக் கூடியவர்களா யிருக்கின்றனர்.

"இல்லானை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு"

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

"அருளிலார்க் கவ்வுலகமில்லை பொருளிலார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு"

என்னுந் திருக்குறட்செய்யுட்களைச் சொன்னாற், கல்லாதவரிலும் அவற்றின் சொற்பொருளை அறியாதவர் எவரேனும் உண்டோ? மற்று, வடமொழி யுபநிடதத்திலிருந்து இங்ஙனமே,

"அந்ததம: ப்ரவிஸந்தியேவித்யா முபாசதே
ததோபூய இவதே தமோய உ வித்யாயாம் ரதா:"

என்னுஞ் செய்யுளை எடுத்துச்சொன்னால் வடமொழி நன்கு கல்லாத எவரேனும் அதன் சொற்பொருள்களை அத்துணை எளிதில் அறிதல் இயலுமோ? இயலாதன்றே. இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட திருக்குறள் முதலான தமிழ்நூல்களின் சொற்பொருள்கள் இன்றைக்கும் எவர்க்கும் விளங்குதல்போல, வடமொழிபோன்ற வேறெந்தப் பழையமொழிகளிலுள்ள நூல்களின் சொற்பொருள்களும் இஞ்ஞான்றுள்ள மக்கட்குச் சிறிதேனும் விளங்குமோ? விளங்காவன்றே.

இனி, வடமொழி நன்கு கற்றார்க்கும், உபநிடதங்கள், சாங்கியம், வேதாந்தம் முதலான நூற்பொருளை அறிதல் எளிதிற்கூடவில்லை; ஏனெனில், அவற்றில் அவைகளை ஆசிரியன் கருத்தையொட்டி விளக்குதற்கேற்ற சொற்களில்லை. தமிழ்நூல்களில் அத்தகைய இடர்ப்பாடுகள் இல்லையென்பது எவரும் அறியக் கூடும்; வழக்கில் இல்லாத சில அருஞ்சொற்களாலும், பழைய இலக்கணமுடிபுகளாலும் இடையிடையே சிறிது இடர்ப்பாடு உளதாமேனும், அவற்றை ஒரு சிறிது உணரவே, மற்றையவெல்லாம் பட்டப்பகல்போல் வெட்டவெளியாய் விளங்குமென்பது தமிழ்நூற்பயிற்சி சிறிதுடையாரும் நன்கறிவர். (தொடரும்)